காலைக்கதிர்
Kalaikathir
விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 32 ஞாயிற்றுக்கிழமை 14.06.2020 கதிர் 221

## இனி இது ரகசியம் அல்ல!

ஒரு கட்சியை அல்லது வேட்பாளரை முன்னிலைப்படுத்துவதற்கு அரச சொத்தை அல்லது வளத்தைப் பயன்படுத்தக் கூடாது என்ற தேர்தல் ஆணையத்தின் உத்தரவை மீறும் அரச, பொது ஊழியருக்கு, அக்குற்றச்சாட்டில் அவர் குற்றவாளியாகக் பக்கம் 02 »

# தேர்தல் ஒத்திவைப்பு இனிமேல் இருக்காது

## மீண்டும் தொற்றுப் பரவினாலும் கூட திடமிட்டபடி வாக்களிப்பு நடக்குமாம்

கொழும்பு, ஜூன் 14

இன்னொரு தடவை கொரோனாத் தொற்று பெருமளவில் பரவினாலும் பொதுத் தேர்தல் ஒத்தி வைக்கப்படமாட்டாது. திட்டமிட்டபடி ஒகஸ்ட் 5ஆம் திகதி வாக்களிப்பு நடைபெற்றே தீரும்.

சுகாதார அதிகாரிகளுடன் கலந்தாலோசனை செய்து தேர்தல் ஆணையம் இவ்வாறு திட்டவட்டமான தீர்மானம் ஒன்றுக்கு வந்துள்ளது.

தேவைப்பட்டால் கொரோனாத் தொற்றுக்காக முடக்கப்படக்கூடிய பகுதிகளுக்கு விசேட வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

கொரோனாத் தொற்று நெருக்கடி மீள ஏற்படுமானால், தேர்தலை மீள ஒத்திவைக்காமல், அதற்கு மத்தியிலும் வாக்களிப்பை நடத்தி முடிப்பதற்கான அவசரகால செயற்றிட்டத்தில் இந்த ஏற்பாடும் அடங்கும் என தேர்தல் ஆணையகத்தின் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரட்ணாயக்கா தெரிவித்தார். 2

## மகளிர் சிறையில் 3 கைப்பேசிகள்

கொழும்பு வெலிக்கடை, பெண்கள் சிறையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 3 கையடக்கத் தொலைபேசிகளும், 17 பட்டரிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தவிர 3 சிம் அட்டைகளும் கைப்பற்றப்பட்டன என சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தபால் மூல வாக்களிப்பு திகதி முடிவில்லை

பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கு இதுவரை காலம் ஒதுக்கப்படவில்லை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால்மூல வாக்களிப்புக்கான திகதி என குறிப்பிட்டு சமூக 2

## விஞ்ஞாபனம் வெளியிடாதாம் மொட்டுக்கட்சி

கொழும்பு, ஜூன் 14

எதிர்வரும் ஓகஸ்டில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன தேர்தல் விஞ்ஞாபனம் எதனையும் வெளியிடாது என 2

## லீசிங் வாகனத்தை இனி பறித்தால் அது கொள்ளை



### பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தல்

நிதி நிறுவனங்களோ, அல்லது குத்தகை நிறுவனங்களோ வாகனங்களைப் பறிமுதல் செய்தால் அதனைக் கொள்ளைச் சம்பவமாகக் கருதி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பதில் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன அனைத்து பொலிஸ் நிலை யங்களுக்கும் ஆலோ சனை வழங்கியுள்ளார் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. 2

## இங்கு முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்கள் 43 உள்ளனவாம்!

### ஞானசார தேரர் கூறுகின்றார்



இலங்கையில் ஏறத்தாழ 43 முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்கள் செயற்படுகின்றன என பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் வண. கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்;.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு 2

## போதைப்பொருளுடன் இருவர் வாழைச்சேனையில் சிக்கினர்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துரைச்சேனை பகுதியில் வெவ்வேறு இடங்களில் இருந்து 460 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் இரண்டு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை காகித ஆலை இராணு 2

## 48 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இங்கு ஆயுதங்களின் தொழில்நுட்பம்!



கொழும்பு, ஜூன் 14

இலங்கையில் 48,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஆதி மனிதர்கள் விலங்குகளின் எலும்புகளிலிருந்து கருவிகளை வடிவமைத்து குரங்குகள் மற்றும் அணில்களை வேட்டையாட பயன்படுத்தினர் என்ற ஆய்வுத் தகவல் வெளியாகியுள்ளது. 2




## தமிழ்க் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வட்டுக்கோட்டை தீர்மானத்தையும் இணையுங்கள்!

### இப்படி வலியுறுத்துகிறதாம் தமிழ் அரசு வாலிபர் அணி

யாழ்ப்பாணம், ஜூன் 14

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வட்டுக்கோட்டை தீர்மானத்தை இணையுங்கள் என தமிழ் அரசு கட்சி தலைமையிடமும், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடமும் தமிழ் அரசு கட்சியின் வாலிபர் அணி வலியுறுத்தியது.

இப்படி 'பேஜ் தமிழ்' இணையம் நேற்று செய்தி வெளியிட்டது. அதில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

இலங்கை தமிழ் அரசு கட்சியின் யாழ் மாவட்ட வாலிபர் முன்னணிக்கும், இலங்கை தமிழ் 2

## இனி இது .............

காணப்பட்டால் மூன்று வருடங்கள் வரையான சிறைத்தண்டனை அல்லது ஒன்றரை லட்சம் ரூபா வரையான அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

இந்தக் குற்றத் தண்டனை பற்றிய விவரம் அரசமைப்பின் 104 (22) பிரிவில் கூறப்பட்டுள்ளது. அதன் மேலதிக விவரம் வர்த்தமானியிலும் பிரசுரமாகியுள்ளது.

செய்தி போன்ற இந்த விடயத்தை இப்பத்தியில் ஏன் குறிப்பிடுகின்றேன் என வாசகர்கள் நினைக்கக் கூடும். காரணம் உண்டு.

அண்மையில் ஓய்வு பெற்ற யாழ்.அரச அதிபர் வேதநாயகன் எந்தச் சர்ச்சையிலும் அதிகம் சிக்காமல் – பெரிய ஆரவாரங்கள், எடுப்புகள் காட்டாமல் – சத்தம், சந்தடியின்றி – தமது பணியை முடித்துக் கொண்டு சென்றவர்.

அவரது ஓய்வுக்கான காலம் ஓரிரு மாதங்கள் இருக்கையில் – கடைசி நேரத்தில் – யாழ். அரச அதிபர் பதவியில் இருந்து தூக்கியடிக்கப்பட்டார். அதற்குப் பின்னால் சில அரசியல்வாதிகளின் அரூபக்கரங்கள் இருந்தன என்று கூறப்படுகின்றது.

ஓய்வுபெற்ற அவருக்கு எதிராக – அவரது காலத்தில் நிறைவேற்றப்பட்ட சில திட்டங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக – ஒழுங்கு நடவடிக்கைகள் குழு ஒன்று உயர்மட்டத்தில் கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்குத் திடீரென வந்திருந்தது. யாழ் செயலகத்தில் இருந்து பல்வேறு கோவைகளையும், கொடுப்பனவு விவரங்களையும் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் கொண்டு தேடித் துளாவியதாம் அக்குழு. பாவம் அது. எந்தப் பிழையையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

வந்த விடயத்தில் விவகாரமாக எதுவும் இல்லாதமையால் புது விடயங்கள் எதையாவது கிளறி எடுத்து வேதநாயகத்தை மாட்ட வைக்க முடியாதா என்று ஆலாய்ப் பறந்த குழுவுக்கு அதிலும் ஏமாற்றம்தான் மிஞ்சியது என்று இதுவரைத் தகவல்.

*'வேதநாயகன் ஓய்வுபெற்றுச் சென்றாலும் அவருக்கு ஓய்வூதியம் கிடைக்குமா என்று பார்ப்போம்'* – என்று அவர் யாழ்.அரச அதிபராக இருந்த போது சிலர் சவால் விட்டுத் திரிந்தனர் என்று அப்போது பரவலாகப் பேசப்பட்டு வந்தது.

அவர்கள்தான் இப்படி விசேட விசாரணைக் குழுக்களை அனுப்பித் தங்களின் கைவரிசையைக் காட்டுகின்றனரோ என்ற சந்தேகம் எனக்கு.

விடயத்துக்குள் கொஞ்சம் தலையை நீட்டி நோண்டிப் பார்த்தால் என் சந்தேகம் தவறு என்று தெரியவந்தது.

விவகாரம் வேறு மாதிரி திசை திரும்புவதை அறிந்து ஆச்சரியத்தில் மூழ்கிப் போனேன் நான்.

யாழ் செயலகத்துக்கு வந்த நிவாரண உதவிப் பொருள்களை ஓர் அரச ஆதரவு அரசியல்வாதி தனது நிவாரணப் பொருள்கள் போல பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு – 'வழித் தேங்காயைத் தெரு பிள்ளையாருக்கு அடிப்பதற்கு' – உதவிய குற்றச்சாட்டு யாழ். செயலக அதிகாரிகள் மீது இருந்து வருவது பரகசிய விடயம்தான்.

ஒரு பத்திரிகையின் புலனாய்வுச் செய்திகளினால் விடயம் இப்போது விவகாரமாகி, விரிவான விசாரணை வரைப் போயிருக்கின்றது.

சம்பந்தப்பட்ட யாரேனும் விசாரணைகளில் குற்றவாளிகளாக்கப்பட்டால் மேற்படி ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட தண்டனைகள் கிடைக்கும். ஆனால் அப்படி ஒரு நிலைமை ஏற்படுவதற்குக் காலம் பிடிக்கும்.

ஆனால், அதற்கிடையில் ஒரு சிக்கல் உள்ளது.

இந்த விவகாரத்தை ஒட்டிய புலன் விசாரணை ஒரு நம்பகரமான மட்டத்தை எட்டியிருப்பதால் அவ்விவகாரத்துக்குத் தார்மீக ரீதியில் பொறுப்பேற்க வேண்டிய அதிகாரிகளில் முக்கியமானவர் யாழ்.அரச அதிபர், அவர் எப்படி மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியாகச் செயற்பட முடியும் என்ற ஒரு கேள்வி தேர்தல் ஆணைய வட்டாரத்தில் பேசப்பட்டிருப்பதாக அறியவந்தது.

அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டு, தற்போதைய யாழ்.அரச அதிபர் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியாகச் செயற்பட முடியாமல் போனால் அவரது இடத்துக்கு யார் என்று ஒரு கேள்வி எழுகின்றது.

தற்போதைய தேர்தல் சட்டங்களின்படி அண்மையில் ஓய்வுபெற்ற மூத்த அதிகாரி யாரையேனும் இப்பதவிக்கு தேர்தல் ஆணையம் நியமிக்கலாம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த சட்ட விதியின் கீழ், அந்தப் பொறுப்பு மீளவும் வேதநாயகத்துக்கு வழங்கப்பட்டு விடலாம் என்று பேச்சடிபட்டதால் அதற்கு முன்னரே அவரை விசாரணையில் மாட்டி விட்டால், அப்பொறுப்புக்கு அவரை நியமிக்க விடாமல் தடுத்து விடலாம் என்ற திட்டத்திலேயே அவருக்கு எதிராக இந்த விசாரணை நடத்தும் திருவிழா ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றதாம்.

ஆனால், சம்பந்தப்பட்டோருக்கு வேதநாயகனை மாட்டி வைப்பதற்கான எந்தக் குளறுபடியோ, ஆவணமோ, சாட்சியமோ, சான்றாதாரமோ இன்னும் கிட்டவில்லை என்பதுதான் அவர்களின் துரதிஷ்டம்.

என்னதான் நடந்து விடப் போகின்றது....? பார்ப்போமே....!

–மின்னல்–

## தமிழ்க்.........

அரசு கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர்களிற்குமிடையிலான சந்திப்பு நேற்று யாழ். மார்ட்டின் வீதியிலுள்ள கட்சி தலைமையகத்தில் இடம்பெற்றது.

வாலிபர் முன்னணியை சேர்ந்த சுமார் 50 பேர் கலந்து கொண்டனர்.

இதன்போது, வாலிபர் முன்னணி சார்பில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

குறிப்பாக, விடுதலைப் புலிகள் பற்றிய விமர்சனங்களை வேட்பாளர்கள் தெரிவித்தால் தம்மால் பொதுமக்களிடம் செல்ல முடியாது, தற்போதும் விமர்சனங்கள் வைக்கப்பட்டு வருவதால் தம்மால் மக்களிடம் செல்ல முடியாமலுள்ளது என இளைஞர் அணியினர் கூட்டாகத் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள், பிரபாகரனின் பெயரை உச்சரிக்காமல் நாம் இதுவரை எந்த தேர்தலையும் சந்திக்கவில்லை. அந்த பெயர்களையும் பாவித்தே வெற்றி பெற்றோம். அதனால் அந்த பெயர்களை அவமரியாதை செய்யக்கூடாது என்றனர்.

இதற்கு பதிலளித்த மாவை சேனாதிராசா, *'நாம் போராட்டத்தை மதிக்கிறோம். அது பற்றி நாம் பொறுப்புடன் பேசுவோம்'* என்றார்.

வட்டுக்கோட்டை தீர்மானத்தையும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இணைக்க வேண்டுமென்றும் வாலிபர் முன்னணியினர் கேட்டுக் கொண்டனர்

இந்த கோரிக்கையை கேட்டு மாவை சேனாதிராசா வெலவெலத்து போனார். *'தம்பியவை பார்ப்போம். அதைப்பற்றி யோசிப்போம்'* என மழுப்பலாகப் பதிலளித்தார்.

*'வட்டுக்கோட்டை தீர்மானத்தை விஞ்ஞாபனத்தில் இணைக்க வேண்டுமென்றால், மீண்டும் ஆயுதப் போராட்டத்தை விரும்புகிறீர்களா?'* என எம்.ஏ.சுமந்திரன் இளைஞர்களிடம் பதில் கேள்வி கேட்டார்.

'போராட்ட வழிமுறையை நாம் குறிப்பிடவில்லை, இலக்கையே குறிப்பிட்டோம்' என வாலிபர் முன்னணியினர் குறிப்பிட்டனர். வாலிபர் முன்னணியின் சில உறுப்பினர்கள் அந்தக் கருத்தை எதிர்த்தனர்.

இதைப்பற்றி நாம் ஆராயலாம் எனக் குறிப்பிட்டு, சர்ச்சைக்கு முற்றுப்புள்ளியிட்டார் மாவை சேனாதிராசா.

கிளிநொச்சி மாவட்டத்தில் கேடயம் சின்னத்தை உரிமை கோரி களமிறங்கிய சுயேச்சைக்குழு தன்னால் இறக்கப்பட்டதாக, கிளிநொச்சியின் முன்னாள் எம்.பி. சிறிதரன் தெரிவித்தார். எனினும் அந்த சுயேச்சைக்குழு தேர்தலில் செயற்படாது என்றார். அத்துடன், ஆறுமுகன் தொண்டமானால் களமிறக்கப்பட்ட சுயேச்சைக்குழுவும் செயற்படாது என்றார்.

இம்முறை சக்கர வியூகம் அமைக்க வேண்டுமென தெரிவித்த ஈ.சரவணபவன், தென்னிலங்கை கட்சிகளிற்கு மக்கள் வாக்களிக்கக்கூடாது என்பதே கூட்டமைப்பின் சக்கர வியூகமாக இருக்க வேண்டுமென்றார்.

அரசியல் தீர்வுடன், அபிவிருத்தி, மக்களின் பொருளாதார மீட்சியை இலக்கு வைத்து எதிர்வரும் காலத்தில் செயற்பட வேண்டும், அதற்கான பொறிமுறையை உருவாக்க வேண்டும் என எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

## விஞ்ஞானம்.............

கட்சியின் பொதுச்செயலாளர் சாகல காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது வெளியிட்ட கொள்கைப் பிரகடனத்தையே இம்முறையும் மக்கள் முன்னிலையில் முன்வைக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இம்முறை தேர்தல் பிரசாரப் பேரணிக்கு பதிலாகச் செய்தியாளர் மாநாடுகளையே நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதியும் பிரதமரும் கலந்துகொள்வார்கள் எனவும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி செய்தியாளர் மாநாட்டை நடத்தவுள்ளோம் எனவும் அவர் கூறினார்.

வீடுவீடாக சென்று பிரசாரத்தை நடத்தும் திட்டமும் உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## போதைப்பொருளுடன்......

வப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வாழைச்சேனை விசேட அதிரடிப்படைப் படையினரும் இணைந்து நேற்று இரவு மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களில் ஒருவரிடம் இருந்து 280 மில்லி கிராமும், மற்றவரிடம் இருந்து 180 மில்லிகிராமுமாக 460 மில்லி கிராம் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

## லீசிங் வாகனத்தை...........

இது தொடர்பில் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கொவிட் –19

வைரஸ் பரவல் காரணமாக நாடளாவிய ரீதியில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்ததனால் மக்களின் வருமானம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இதனால் மக்களுக்கு சலுகைகளை வழங்கும் நோக்கில் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அதற்கமைய தனியார் கடன் தவணைகளை அறவிடுவதற்கு ஆறுமாதகாலம் அவகாசம் வழங்குமாறு குறிப்பிட்டு அரசாங்கம் கடந்த மார்ச் மாதமே வர்த்தமானி வெளியிட்டிருந்தது.

இதன்போது வாகன குத்தகை நிறுவனங்களும் இவ்வாறு 6 மாதகால அவகாசத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் சில நிறுவனங்கள் அதனை கடைப்பிடிப்பதில்லை என்றும் , தவணைக் கட்டணங்களை செலுத்த தவறும் வாகனங்களை பறிமுதல் செய்வதாகவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள இந்த சலுகை காலத்திற்குள் நிதி நிறுவனமோ , குத்தகை நிறுவனமோ தவணைக்கட்டணங்கள் செலுத்தப்படவில்லை என்று பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு அளித்தால் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று பதில் பொலிஸ்மா அதிபர் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை இந்த சலுகைகாலத்தில் தவணை கட்டணத்தை செலுத்தவில்லை என்ற காரணத்தினால் குத்தகை நிறுவனங்கள் வாகனங்களை பறிமுதல் செய்தால் அதனை தண்டனைச் சட்டக்கோவைக்கமைய கொள்ளை அல்லது திருட்டு தொடர்பான வழக்காக பதிவுச் செய்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு வாகனங்களை பறிமுதல் செய்துவிட்டு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கவரும் குத்தகை நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களினால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பிலும் மேற்கூறப்பட்டதைப் போன்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அந்த வழக்கு குற்றவியல் சட்டத்திற்கமைய விசாரணையை நடத்தவேண்டும் என்றும் பதில் பொலிஸ் மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

## தேர்தல்.............

நெருக்கடி ஏற்பட்ட பிரதேசங்கள் முடக்கப்பட்டால், அந்தப் பிரதேசங்களுக்கு வெளியில் அவற்றுக்கான வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப் படும். எனினும் வாக்காளர்களுக்கான போக்குவரத்து வசதி விசேடமாக செய்து கொடுக்கப்படும் என்பது வகுக்கப்பட்டுள்ள அந்த அவசரகால செயற்றிட்டத்தில் அடங்கியுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின்படி, வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களை அவசர தேவைகளுக்கு ஏற்ப தேர்தல் ஆணையம் மாற்றி அமைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் வாக்களிப்பு காலத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டோர் வாக்களிப்பதற்கு வசதியாக தனிமைப் படுத் தல் நிலையங்களை ஒட்டி வாக்களிப்பு மையங்களை அமைப்பது குறித்தும் சுகாதார அதிகாரிகளுடன் தேர்தல் ஆணையம் விரிவான பேச்சுகளை நடத்தி, முடிவுகளை எடுத்துத் திட்டங்களைத் தயாரித்திருப்பதாகவும் கூறப்பட்டுகின்றது.

தேர்தலுக்கு முதல் நாளும், தேர்தல் அன்றும் வாக்களிப்பு நிலையங்களில் தொற்றுப் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து சுகாதார அதிகாரிகளின் குழுக்கள் நேரடியாக ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்துக்கும் சென்று கண்காணிப்பைச் செய்வதற்கான ஏற்பாட்டையும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது.

மொத்தம் சுமார் 12 ஆயிரம் வாக்களிப்பு நிலையங்களில் ஒரு கோடி 62 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

## இங்கு முஸ்லிம்.............

வில் நேற்றுசாட்சியமளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை அடிப்படைவாத கருத்துக்களை கொண்ட சர்வதேச முஸ்லிம் தலைவர்களோடு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் உறவினர் ஒருவர், கட்டாரில் உள்ள இலங்கை தூதரகத்தில் சேவையாளர் ஒருவர் மற்றும் இலங்கை முஸ்லிம் கவுன்ஸிலின் தலைவர் என்.எம் அமீன் ஆகியோர் இணைந்து எடுத்துக்கொண்டனர் எனக் கூறப்படும் படம் ஒன்றையும் ஞானசார தேரர் ஆணைக்குழுவில் காட்சிப்படுத்தினார்.

## 48 ஆயிரம் ஆண்டு........

ஐரோப்பா மற்றும் ஆபிரிக்காவுக்கு வெளியே, தொன்மையான வில் மற்றும் அம்பு பயன்பாட்டின் ஆதாரங்களை இலங்கையிலேயே கண்டறிந்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு, ஃபா–ஹீன்லீனா குகையில் மீட்கப்பட்ட குரங்கு மற்றும் அணில் எலும்புகளை ஆய்வு செய்ததிலேயே இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் ஆடை வடிவமைத்தமைக்கான சான்றுகளும் அங்கு கிடைத்துள்ளன.

## தபால் மூல............

ஊடகங்களில் வெளியாகும் தகவல்கள் பொய்யானவை எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான எந்தவித திகதியையும் நிர்ணயித்து தேர்தல் ஆணைக்குழு எந்தவொரு அறிக்கையையும் வெளியிடவில்லை எனவும், அதற்கான ஆவணங்கள் இதுவரை தயார்படுத்தப்படவில்லை என அந்த விடயங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகமும் தனக்கு அறிவித்துள்ளனர் என மஹிந்த தேசப்பிரிய அந்த அறிக்கையின் ஊடாகத் தெரிவித்துள்ளார்.

# மருத்துவ பீடங்கள் ஜூன் 15; ஏனைய பீடங்கள் ஜூன் 22; இறுதியாண்டுப் பரீட்சைகளை நடாத்துவதற்காகத் திறப்பு

**கொழும்பு, ஜூன், 14**

**இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களும் இறுதியாண்டு மாணவர்களின் பரீட்சைகளுக்காக எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் திறக்கப்படவுள்ளன. இந்தத் தகவலைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.**



அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். உயர்கல்வி அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார்.

இதன் போது விளக்கமளித்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க மேலும் தெரிவிக்கையில் -

நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் இறுதியாண்டு மாணவர்களின், இறுதிப்பரீட்சைகளுக்காக எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை மீளத் திறப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. சகல பல்கலைக்கழகங்களினதும் துணைவேந்தர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களுடனான சந்திப்பின் போது இதற்கான உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இறுதியாண்டு மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைகளை எதிர்வரும் ஜூன் 22 ஆம் திகதி முதல், ஒகஸ்ட் 22 திகதி வரையான காலப்பகுதிக்குள் நடத்தி முடிப்பதற்கும், பல கட்டங்களாகப் பரீட்சைக்களை நடாத்துவதற்கேற்றவாறு நேர அட்டவணைகளைத் தயாரித்து, அவற்றைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்கும், மாணவர்களுக்கான தங்குமிட ஏற்பாடுகள் மற்றும் சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தல்களுக்கமைய, சுகாதார நடைமுறைகளை மாணவர்கள் பின்பற்றுவதை உறுதி செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் துணைவேந்தர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் இணங்கியிருக்கின்றனர்.

அதன் படி, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும். ஏனைய பீடங்களின் இறுதியாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகளை எதிர்வரும் ஜூன் 22 ஆம் திகதி முதல், ஒகஸ்ட் 22 திகதி வரையான காலப்பகுதிக்குள் நடத்தி முடிப்பதற்கேற்ற வகையில் அந்தந்தப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் தனித்தனியாக முடிவெடுத்து அறிவிப்பார்கள்.

எழுத்துப் பரீட்சைகளின் போதும், செயன்முறைப் பரீட்சைகளின் போதும் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை சுகாதார நடைமுறைகளுக்கு அமையத் தீர்மானிக்கப்படும். பரீட்சைகளுக்கு மாணவர்கள் தத்தமது வீடுகளில் இருந்து வருவதை ஊக்குவிக்கும் வகையில் அறிவுறுத்தப்பட வேண்டும். மாணவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்கும் போது, அறையொன்றுக்கு ஒரு மாணவர் வீதமே அனுமதிக்கப்படும்.

மறு அறிவித்தல் வரை, பல்கலைக்கழக வளாகங்களினுள் (நூலகம் உட்பட) இரவு 7 மணிக்குப் பின்னர் மாணவர்கள் நிற்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். அதே போல மறு அறிவித்தல் வரை பல்கலைக்கழகங்களினுள் வெளியாரோ மாணவர்களோ கூட்டங்களைக் கூடுவதற்கும், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கும் அனுமதி இல்லை.

பல்கலைக்கழகங்கள் வழமைக்குத் திரும்பும் வரை - மறு அறிவித்தல் வரை, பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு நடவடிக்கைகள்,பயிற்சிகள் இடம்பெறமாட்டா. பட்டப்பின் படிப்பு மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் சுகாதார நடைமுறைகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டும் என்றும் , இவையனைத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் பல்கலைக்கழகங்களின் அனைத்து நிர்வாக அதிகாரிகளும் கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும் என்றும் அவர் அங்கு தெரிவித்தார்

## விரல்களில் மை பூசுவதற்கு இம்முறை ' மார்க்கர்'க்குப் பதிலாக 'இயர் பட்ஸ்'

கொழும்பு, ஜூன் 14

எதிர்வரும் ஆகஸ்ட் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வாக்காளர்களின் விரல்களில் மை அடையாளத்தைப் பதிப்பதற்கு காதுகளைச் சுத்தப்படுத்துவதற்குப் பாவிக்கும் பஞ்சுகள் (Disposable cotton buds)பயன்படுத்தப்படவுள்ளன.

கடந்த வாரம் இடம்பெற்ற தேர்தல் ஒத்திகைகளின் போது, வழக்கமாக வாக்காளர்களின் விரல்களில் மை அடையாளத்தைப் பதிப்பதற்கு பயன்படுத்தப்படும் மார்கர்களுக்குப் பதிலாக காதுகளைச் சுத்தப்படுத்துவதற்குப் பயன்படுத்தும் இயர் பட்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்திருப்பதனால், எதிர்வரும் ஒகஸ்ட் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் 'இயர் பட்'களே பயன்படுத்தப்படவுள்ளன என்று தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உடனடி வேலைவாய்ப்பு

காலைக்கதிர் பத்திரிகை நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

- பத்திரிகை விநியோகத்தர்
- விளம்பரம் சேகரிப்பவர்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்
- பிரதேச செய்தியாளர்கள்
- அலுவலக செய்தியாளர்கள்

சனி (13/06/2020) மற்றும் ஞாயிறு (14/06/2020) ஆகிய தினங்களில் நேரில் சமூகமளிக்கவும்.

Green Media House (pvt) Ltd
30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
(இந்துக்கல்லூரி மைதானத்திற்கு எதிரில்)
076 443 8623

## மாவை - சசிகலா ரவிராஜ் நேற்று சந்தித்துப் பேச்சு!

### மகளிர் நலனுக்கு முக்கிய இடம் விஞ்ஞாபனத்தில் அளிக்க முடிவு

இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜாவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பெண் வேட்பாளர் திருமதி சசிகலா ரவிராஜுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரியில் உள்ள திருமதி சசிகலா ரவிராஜின் இல்லத்தில் நேற்று மாலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, யாழ்.மாவட்டத்தில் உள்ள பெண் அமைப்புக்களை சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதோடு , அத்தகைய சந்திப்புக்களின் ஊடாக பெண்கள் சார்ந்த விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, அவற்றில் உள்ள முக்கிய விடயங்களைக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளீர்ப்பது பற்றியும் பேசப்பட்டதாகத் தெரிய வருகிறது.

மேலும், கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் ஒரேயொரு பெண் வேட்பாளர் என்ற அடிப்படையிலும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடாராஜா ரவிராஜின் அர்ப்பணிப்பான மக்கள் சேவையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்குமாக சசிகலா ரவிராஜின் வெற்றிக்காக ஏனைய வேட்பாளர்களும் கூட்டிணைந்து பணியாற்றுவது அவசியமென்றும் அதுபற்றி கலந்துரையாடல்கள் அடுத்துவரும் நாள்களில் முன்னெடுக்கவுள்ளன எனவும் மாவை. சேனாதிராஜா தெரிவித்தார்.

தென்மராட்சியில் முன்னெடுக்கவுள்ள தேர்தல் செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பிலும் இச்சந்திப்பின்போது பரஸ்பரம் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## தொழிலை இழந்த 15,000 பேர் திணைக்களத்தில் முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 14

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தொழிலை இழந்த 15,000 பேர் தொழில் திணைக்களத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர்.

கொரோனா தொற்றினால் மூடப்பட்ட அனைத்து நிறுவனங்களும் அரசின் ஆலோசனைக்கு அமைய தற்போது தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன.

ஆனாலும் சுமார் மூன்று மாதங்கள் மூடப்பட்டிருந்த நிறுவனங்களில், மீளச்செயற்பாடுகளை ஆரம்பிக்கும்போது பெருந்திரளான ஊழியர்கள் தொழிலை இழந்துள்ளனர் எனத் தொழில் ஆணையாளர் நாயகம் ஏ.ஜே.விமலவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் தொழிலை இழந்த சுமார் 15,000 பேரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அனைவரினதும் தொழில் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படும் எனவும் ஏ.ஜே.விமலவீர நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் -சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# அரசியல் கட்சிகளுடன் பேசுங்கள்

'சாண் ஏற முழம் சறுக்கும்' விவகாரமாகப் பொதுத் தேர்தல் விடயம் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

மார்ச் 02ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் பிரகடனத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்தமையை அடுத்து ஆரம்பமான தேர்தல் திருவிழா நூறு நாள்கள் கடந்தும் இன்னும் தீர்க்கமான – தீர்மானகரமான – கட்டத்தை அடையவில்லை என்றே கூறவேண்டும்.

ஏற்கனவே பொதுத் தேர்தலுக்கான திகதிகள் ஒத்திவைக்கப்பட்டு இப்போது ஓகஸ்ட் 05ஆம் திகதி என்று முடிவாகியிருக்கின்றது.

அன்றைய தினத்திலும் திட்டமிட்டபடி பொதுத்தேர்தல் நடத்துவதற்கு கொரோனாப் பேரிடர் விட்டுத் தருமா அல்லது மீண்டும் அது வீறு கொண்டெழுந்து தேர்தலைக் கடைசி நேரத்தில் குழப்பி ஆட்டம் காண வைக்குமா என்பது தெரியவில்லை.

அதனால் தேர்தலில் குதித்துள்ள கட்சியினரும், வேட்பாளர்களும் மிகுந்த முன்னெச்சரிக்கையாகத்தான் நடக்கின்றார்கள் – கொரோனாத் தொற்றுத் தவிர்ப்பு முன்னெச்சரிக்கையில் மட்டுமல்ல, தமது பிரச்சாரங்கள் தொடர்பான ஒழுங்குகளிலும் கூட.

ஏற்கனவே இரண்டு தடவைகள் திகதிகள் நிர்ணயிக்கப்பட்டுத் தேர்தல்கள் தள்ளிப் போய் விட்டன. வாக்களிப்பு நடக்காத நிலையில் தேர்தல் காலம் நீடிக்கப்படுகின்றது. அதனால் அவசரப்பட்டு நேரத்துடன் பிரசாரக் களத்தில் குறித்துத் தமது நிதியையும் வளத்தையும் வீணாக்கிக் கொள்ள அவர்கள் தயார் இல்லை.

எனவே நேரத்தோடு பிரசாரத்தை ஆரம்பிகாமல், அவர்கள் சற்றுப் பின்வாங்குகின்றார்கள். தேர்தல் நடப்பது நிச்சயம் என்ற இறுதி நிலைதென்படும் போது – கடைசி நேரத்தில் – பிரசாரத்தைத் தீவிரப்படுத்தலாம், நிதி வளத்தைக் கொட்டலாம் என்பது அவர்களில் பலரினதும் கணிப்பு. அதனால் தேர்தல் பிரசார ஆலாபனையைச் சற்று அடக்கி வாசிக்கின்றார்கள்.

அதனால், இறுதி நேரத்தில் தேர்தல் பிரசாரம் வழமையை விட இரட்டிப்புச் சூடாகும் என எதிர்பார்க்கலாம்.

எனினும், அப்படித் தேர்தல் பிரசாரத்தை இறுதி நேரத்தில் தீவிரப்படுத்தி முன்னெடுத்துச் செல்வதிலும் தமக்குச் சிக்கல்கள் உள்ளன என்கின்றார்கள் பிரதான கட்சிகளின் பிரமுகர்கள்.

பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் நடைமுறைச் சாத்தியமற்றவை எனறு ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளரும், முன்னாள் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரத்துக்கான சுதந்திரம் வலுவாக அடைக்கப்பட்டுள்ளது என்கின்றார் அவர்.

அரசியல் பிரசாரக் கூட்டத்துக்கு நூறு பேர்தான் வரமுடியும். அல்லது ஐந்நூறு பேர் வருவதாக இருந்தால் அவர்களின் பெயர்ப் பட்டியலை வழங்க வேண்டும் என்றெல்லாம் விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளன. இது சாத்தியமற்ற – அசாதாரணமான – விதிமுறைகள் என்று விமர்சிக்கின்றார் அவர்.

*"தேர்தல் கூட்டங்களுக்கு வருபவர்களின் பெயர் பட்டியலை சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வழங்க வேண்டும் என்பது போன்ற விதிமுறைகள் நடைமுறைச் சாத்தியமற்றவை."* – என்று ஆளும் கட்சி உறுப்பினரான வாசுதேவ நாணயக்காரவும் கூறுகின்றார்.

அதேசமயம் இவர்கள் இருவரும் – வாசுவேத நாணயக்காரவும், லக்ஷ்மன் கிரியெல்லவும் – இந்த விதிமுறைகள் தொடர்பில் கூறும் ஒரே மாதிரியான கருத்தும் கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடாமல் இத்தகைய விதிமுறைகள் தொடர்பான முடிவுகளை எடுக்கக்கூடாது; எடுக்க முடியாது. ஆனால் இந்த விதிமுறைகள் அப்படி அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடப்படாமல் சுகாதார மற்றும் தேர்தல் அதிகாரிகளினால் தம்பாட்டில் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசனை செய்யாமல் – அவர்களின் கருத்துகள் செவிமடுக்கப்படாமல் – இத்தகைய விதிமுறைகள் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்குமானால் அது துரதிஷ்டவசமான நிலையாகும்.

தேர்தல் திணைக்களம் உடனடியாக கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகளைக் கூட்டி இவ்விடயங்கள் குறித்து கலந்தாலோசித்து, தேர்தல் விதிமுறை குறித்து இணக்கமான ஓர் ஏற்பாட்டைச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பது அவசரமானதும், அவசியமானதுமான விடயமாகும்.

# ஹுலை விலக்குமாறு தினமும் சிலர் வாய்ப்பாடு

## வேடிக்கை என்கிறார் அஸாத் சாலி

கொழும்பு, ஜூன் 14

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் ஹுலை விலக்க வேண்டுமென வாய்ப்பாடு போல் தினமும் கூறுவது வேடிக்கையானது என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் ஆளுநருமான அஸாத் சாலி தெரிவித்துள்ளார்.



கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அவர், அரசின் கொள்கைகளும், போக்குகளும், கோட்பாடுகளும் என்னவென்பது அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தனவின் தடுமாற்றங்களிலிருந்து தெரிவதாகவும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், கொழும்புக்கு வந்த அமெரிக்க இராஜதந்திரியின் பி.சி.ஆர். பரிசோதனை விவகாரத்தில் வெளிவிவகார அமைச்சு ஒரு கருத்தையும் அமைச்சர் விமல் வீரவன்ஸ வேறொரு கருத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

கொழும்புக்கு வந்த அமெரிக்கப் பிரதிநிதியை இராஜதந்திரி என்றும், முறையான அழைப்பின் பேரிலேயே அவர் வருகை தந்துள்ளார் எனவும் வெளிவிவகார அமைச்சு கூறும் அதேவேளை, அவர் அமெரிக்கக் கடற்படையைச் சார்ந்தவர் என்றும், அவரின் வருகை தேடிப்பார்க்க வேண்டியதென்றும் விமல் சாடுகிறார்.

இவ்வாறு பல விடயங்களில் அரசுக்கும் மாறுபட்ட, வேறுபட்ட கருத்துக்களும் கொள்கைகளும் இருக்கின்றன. அரசியல் மேடையிலே இவர்கள் தினமும் தப்புத்தாளம் போட்டு வருகின்றனர்.

அப்பாவி மக்களையோ, தொழிலாளர்களையோ பாதுகாப்பு அமைச்சு ஒருபோதும் துன்புறுத்தமாட்டாது என்றும், ஜனாதிபதியின் கொள்கையும் அதுதான் என்றும் அமைச்சின் செயலாளர் அடிக்கடி ஊடகங்களில் கூறிவருகின்றார்.

ஆனால், கடந்த சில நாள்களுக்கு முன்னர், அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்னே நடந்த அமைதிவழி ஆர்ப்பாட்டத்தின் போது, படையினர் நடந்துகொண்ட முறைமை முழு உலகமே அறியும்.

பெண்களை மல்லாக்காகத் தூக்கியெறிவதும், அவர்களின் ஆடைகளைப் பிடித்து இழுப்பதும் அராஜகம் இல்லையா? இந்த அட்டூழியங்களை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எந்தக் கோணத்தில் பார்க்கின்றார்?

அரச கட்சியினதும் அதன் பங்காளிகளினதும் ஊடக மாநாட்டில் முதல் பேசு பொருளாக, ஏசுபொருளாக சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவே இருக்கின்றது.

ஆணைக்குழுவைதிட்டுவதும், ஹுலை பதவியிலிருந்து துரத்த வேண்டுமெனவும் கூறுவதையே இவர்கள் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். இந்த விடயத்தில் வாய்ச் சவடால் மன்னன் விமலும், பேராசிரியர் பீரிஸும் முன்னணி வகிக்கின்றனர்.

நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளில், 'மூன்றில் இரண்டு வைரஸ் காய்ச்சல்' பீடிக்கப்படுள்ள கட்சிகள் மாத்திரமே, தேர்தல்கள் ஆணைக்குழு மீது பழிகளைச் சுமத்துகிறன. தினமும் அவர்கள் இதனை வாய்ப்பாடாகக் கூறி வருகின்றனர்.

பச்சைக் கள்வர்களுக்கு வாக்குப்போட வேண்டாமென ஹுல் கூறினார் எனவும், அது தங்களைத்தான் எனவும் இவர்கள் நினைக்கின்றனர். - என்றார்.

# எரிபொருள் விலை அதிகரிக்கப்படாது

வீழ்ச்சியடைந்த உலகளாவிய எரிபொருள் விலை, இந்த ஆண்டு இறுதிக்குள் கணிசமான அளவு மீண்டும் அதிகரிக்கும் என நம்புவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தங்காலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அமைச்சர், மசகு எண்ணெய் விலை எவ்வளவு உயர்ந்தாலும், இலங்கையில் எரிபொருள் விலை இந்த ஆண்டு எந்தவொரு சூழ்நிலையிலும் அதிகரிக்கப்படாது என உறுதியளித்தார்.

மேலும் நெருக்கடிகாலத்தில் அரசு வருமானத்தை இழந்திருந்தாலும் இழந்தவற்றை மீட்க தொடர்ந்தும் நடவடிக்கைள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக எரிபொருள் விலையை குறைக்க வேண்டும் என்று பலர் கோரிக்கைகளை முன்வைத்தபோதும் அதில் எவ்வித மாற்றங்களை மேற்கொள்ளாதமையினால் அரசு எரிபொருள் மூலம் வருமானத்தை ஈட்டியது.

இருப்பினும் அந்த நேரத்தில் அரசு எரிபொருள் விலையை குறைத்திருந் தால், இப்போது விலைகள் அதிகரிக்கப் பட்டிருக்கும் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, எரிபொருள் விலையால் ஏற்படும் அனைத்து இலாபங்க ளும் அரச நிதிக்கு ஒதுக்கப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

# மோ. சைக்கிளில் வந்தவர் ஓட்டோச் சாரதி மீது சூடு

ஹங்வெல்ல எலமலவெல பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஓட்டோச் சாரதியொருவர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த நபரொருவர் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த வெலிபில்லேவ பகுதியை சேர்ந்த 43 வயதுடைய ஓட்டோச் சாரதி அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கி சூடு நடத்திய சந்தேக நபரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. சம்பவம் தொடர்பில் ஹங்வெல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# இத்தாலிக்குச் சென்ற படகு மூழ்கி 54 அகதிகள் இறப்பு!



இத்தாலி நோக்கிச் சென்ற படகு ஒன்று கடலில் மூழ்கிய தால் 54பேர் சாவடைந்தனர். இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது:

ஆபிரிக்காவைச் சேர்ந்த அகதிகள் மீன் பிடிப் படகு ஒன் றில் மத்தியதரைக் கடல் வழியாக இத்தாலி சென்று கொண்டு இருந்தனர்.

இதில் 54க்கும் மேற்பட்டவர்கள் பயணம் செய்தனர். துனிசியாவை நெருங்கும் சமயம் படகு நீரில் மூழ்கியது. இதில் பயணம் செய்த அனைவரும் நீரில் மூழ்கிச் சாவடைந் தனர். முதற்கட்டமாக ஒரு பெண் உட்பட 14 பேரின் உடல்களைத் துனிசியாப் பொலிஸார் மீட்டனர். இதனி டையே கெர்கென்னா தீவுப் பகுதியில் இரண்டு சிறுவர்கள் உட்பட 22 பேரின் உடல்கள் கரை ஒதுங்கின. மேலும் கடற்படை அதிகாரிகள் குழு கடலில் மிதந்த 19 உடல்களை மீட்டுள்ளது. தொடர்ந்து தேடுதல் நடவடிக்கை நடந்து வரு கிறது.

# அமெரிக்காவை கொரோனா கடுமையாகத் தாக்குகின்றது

## உலக சுகாதார நிறுவனம் தெரிவிப்பு

கொரோனா வைரஸ் அமெரிக்காவைக் கடுமையாகத் தாக்கி வருகிறது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து உலக சுகாதார அமைப்பின் சிறப்பு நிபுணரான மைக் ரியான் கூறும்போது, கொரோனா வைரஸ் தற்போது அமெரிக்காவின் தென் மற்றும் மத்தியப் பகுதிகளில் கடுமையாகப் பரவி வருகிறது. தற்போதைய தகவலின்படி பிரேசில் கொரோனா பரவலின் மையமாகத் தற்போது உருவாகியுள்ளது. அதிக மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் கொரோனா பாதிப்பு அதிகளவில் பரவி வருகிறது. அமெரிக்காவில் சுமார் 20 லட்சத்துக்கும் அதிக மானவர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்க, ஒரு லட்சத்துக்கும் அதிகம ானவர்கள் உயிரிழந்துள்ளனர். பிரேசிலில் 8 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஊரடங்குக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, மக்கள் கூடும் இடங்களில் சமூக இடைவெளி மற்றும் பொதுச் சுகாதாரம் பின்பற்றப்படாமல் இருந்தால் தொற்று மீண்டும் பரவும் என்றார்.

# சிரியா பிரதமர் பதவி நீக்கம் அதிபர் அல் ஆசாத் அதிரடி



சிரியா நாட்டின் பிரதமராகப் பதவி வகித்துவந்த இமாத் காமிசை அதிரடியாகப் பதவி நீக்கம் செய்துள்ளார் சிரிய அதி பர் அல் ஆசாத். நேற்று முன்தினம் இந்தப் பதவி நீக்கம் நிகழ்ந் தது. 2016ஆம் ஆண்டிலிருந்து பிரதமராகப் பதவி வகித்து வந்த அவரைப் பதவியிலிருந்து நீக்கியது ஏன் என்பது குறித்து வெளிப்படையாக எந்தவொரு காரணமும் தெரிவிக்கப்பட வில்லை. சிரியாவின் புதிய பிரதமராக அந்த நாட்டின் நீர்வளத் துறை அமைச்சராகப் பதவி வகித்து வந்த உசேன் ஆர்னஸ் நியமிக்கப்பட்டுள்ளார். ஈராக் எல்லையில் உள்ள டெயிர் ஆஸ் ஜோர் மாகாண ஆளுநராகவும் இவர் இருந்தவர்.

சிரியாவில் 2011ஆம் ஆண்டு முதல் அதிபர் அல் ஆசாத் படைகளுக்குக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே உள் நாட்டுப்போர் நடந்து வருகிறது. அந்த நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. நாணய மதிப்பு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. ஊழலும் பெருகி வருகிறது. அங்குள்ள சுவீடா நகரத்தில் அரசுக்கு எதிராகச் சமீபத்தில் மக்கள் திரண்டு போராடியமை அபூர்வ நிகழ்வாகப் பெரும் பர பரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையிலேயே அந்த நாட்டின் பிரதமர் இமாத் காமிஸ் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

# அதிபர் ட்ரம்ப்பை இனி நம்போம் இராணுவத்தை பலப்படுத்துவோம்

## வடகொரியா அதிரடி



ட்ரம்ப்பின் வெற்று வாக்கு றுதியை நம்பிப் பயனில்லை, அமெரிக்காவின் அச்சுறுத்தல் களை எதிர்கொள்வதற்கு எமது இராணுவத்தைப் பலப்படுத்து வோம் என்று வடகொரியா தெரி வித்துள்ளது. வடகொரியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் ரி சோன் குவோன் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கப்பூரில் நடைபெற்ற ட்ரம்ப் - கிம் சந்திப்புப் போல் இனி நடைபெற வாய்ப்பில்லை, மேலும் அதன் மூலம் இருதரப்பு உறவில் எந்த ஒரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஆகவே எந்த ஒரு பலனும் இல்லாத ட்ரம்ப்பின் வெற்று வாக்குறு தியை நம்பிப் பயனில்லை, அத் தகைய வெற்று வாக்குறுதிக் கான வாய்ப்பை இனி ட்ரம்புக்கு நாம் வழங்கப்போவதுமில்லை. தான் ஏதோ அரசியல் சாதனை நிகழ்த்துகிறோம் என்ற பெயரில் அவர் மேற்கொள்ளும் இத்த கைய சந்திப்புகளை நம்பப் போவதில்லை, ஆகவே இனி அத்தகைய சந்திப்புகள் நிகழாது. அமெரிக்காவின் அச்சுறுத்தல் களுக்கு எதிராக எங்கள் நாட்டு இராணுவத்தைப் பலப்படுத்து வோம் - என்றார்.

# கயிறு கட்டி தர தரவென இழுத்து வானில் ஏற்றப்பட்ட சடலங்கள்

டெல்லியில் கொரோனாவால் உயிரிழந்தவ ரின் உடல், குப்பைத்தொட்டியில் வீசப்பட்ட நிலை யில், தற்போது மேற்குவங்காள மாநிலத்தில் மற் றொரு அவலம் அரங்கேறியுள்ளது. தெற்குக் கொல் கத்தாவில் சடலங்களின் கழுத்தில் கயிறு கட்டி அவற்றைத் தரையில் தர தரவென இழுத்துச் சென்று நகராட்சி வாகனத்துக்குள் தூக்கிப்போட்ட சம்பவம் நடந்துள்ளது. பின்னர் அதேபோல மயானத்தி லும் செய்யப்பட்டுள்து. அப்போது துர்நாற்றம் எழுந்ததால் உள்ளூர்வாசிகள் ஒன்றுகூடித் தகன வாசலுக்குப் பூட்டுப் போட்டனர். உடல்களை ஊழி யர் ஒருவர் கழுத்தில் கயிற்றைக் கட்டி இழுத்துச் சென்று வாகனத்தில் ஏற்றும் கொடுமையான காட்சியை, ஒருவர் கைபேசியில் படம் பிடித்து வெளியிட்டமையாலேயே இந்தச் சம்பவம் தெரிய வந்துள்ளது. இந்தக் காணொலி சமூக வலைத் தளங்களில் வெளியாகி, அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது. இதுபோன்று 21பேரின் உடல்கள் இழுத் துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து விளக்கம் அளிக்குமாறு அதிகாரிகளுக்கு மேற்கு வங்க ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். அந்த உடல் கள் கொரோனா நோயாளிகளின் உடல்கள் அல்ல, மருத்துவமனைப் பிண அறையில் உரிமை கோரப்படாதிருந்த அல்லது அடையாளம் காணப் படாதிருந்த உடல்கள் என்று மேற்கு வங்க சுகா தாரத்துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து போலிச் செய்தி பரப்பும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கொல்கத்தா பொலிஸார் தெரி வித்தனர்.








# கொரோனாவைக் கையாளும் திறன் நேபாளத்துக்கு இல்லை

## காத்மண்டுவில் அரசுக்கு எதிராகப் போராட்டம்

நேபாளத்தின் தலைநகரமான காத்மாண்டுவில் நூற்றுக்கணக்கானவர்கள் கூடிக் கொரோனா வைரஸ் நெருக்கடியை அரசு திறனற்ற விதத்தில் கையாள்வதாகக் குறிப்பிட்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வெளிநாட்டைச் சேர்ந்த 7பேர் உட்பட 10 பேரை நேபாளப் பொலிஸார் கைது செய்தனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து மார்ச் மாதத்தில் முழுமையான முடக்கத்தை விதித்தது நேபாளம். ஆனால் அதன் பின்னர் தொற்றாளர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 62 ஆக அதிகரித்துள்ளது, இதில் 16 பேர் உயிரிழந்துள்ளனர், மேலும் தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்த போதுமான திட்டங்களை அரசு செயற்படுத்தவில்லை என்று விமர்சனங்கள் எழுந்தன.

இந்த வார ஆரம்பத்தில் நேபாளப் பிரதமரின் இல்லத்திற்கு அருகில் போராட்டங்கள் நடந்தன. அந்தப் போராட்டத்தைக் கலைப்பதற்குப் பொலிசார் தடியடி, நீர் விசிறல் மற்றும் கண்ணீர்ப்புகை ஆகியவற்றைப் பயன்படுத்தினர். இதன் பின்னரே காத்மாண்டுவில் இந்தப் போராட்டம் நடந்தது. ஒரு பெரிய வீதியில் ஆயிரம் பேர் கூடியிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர், அங்கு ஏழு வெளிநாட்டினர் கைது செய்யப்பட்டனர். நேபாளத்தின் உள் விவகாரங்களில் தலையிட்டதற்காக அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## ‘ஆரோக்கிய சேது’ முக்கிமானது! ஐ.நாவில் புகழ்ந்து இந்தியா உரை




இந்தியாவில்கொரோனாவுக்கு எதிரான போரில், தடம் கண்டறிவதில் ’ஆரோக்கிய சேது’ செயலி முக்கிய பங்கு வகிக்கிறது என்று ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியத் துணைத்தூதர் நாகராஜ்நாயுடு தெரிவித்தார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நா. தலைமையகத்தில், நேற்றுமுன்தினம் காணொலிக் காட்சி வழியாகப் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: கொரோனா வைரஸ் பரவி வரும் இந்த வேளையில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ட்ரோன்கள் (ஆளில்லா விமானங்கள்), தொடர்புகளைக் கண்டுபிடிக்கும் செயலிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டன. கொரோனாத் தொடர்புகளைக் கண்டுபிடிப்பதில் விரைவான வளர்ச்சிக்கு ஆரோக்கிய சேது செயலி முக்கிய பங்கு வகிக்கிறது. ஆரோக்கிய சேது செயலியை இந்திய அரசு ஏப்ரல் 2ஆம் திகதி அறிமுகப்படுத்தியது. இது கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவதற்கான ஆபத்தை மதிப்பிடுவதற்கும், பாதிக்கப்பட்ட நபருடன் நெருங்கிய தொடர்புக்கு வந்தால், அதிகாரிகளைத் உசார்ப்படுத்தவும் உதவுகிறது. கொரோனா நோயாளிகளுடன் தொடர்பு கொண்ட நபர்களின் விவரங்களைப் பதிவு செய்ய உதவுகிறது. 12 மொழிகள் மற்றும் பல்வேறு தளங்களில் இந்த பயன்பாடு கிடைக்கிறது. இதை இந்தியாவில் மே மாதம் 26ஆம் திகதி நிலவரப்படி 11 கோடியே 40 லட்சம் பேர் பதிவிறக்கம் செய்து பயன்படுத்துகின்றனர். இது உலகளவில் பிற எந்த தொடர்பு தடமறிதல் பயன்பாட்டையும் விட அதிகமானது. இருந்தபோதிலும், சைபர் பாதுகாப்பு (இணைய பாதுகாப்பு), தரவு தனி உரிமை, தவறான தகவல் பரவல் ஆகியற்றில் எழுகின்ற சிக்கல்களை கையாள்கிற வேண்டியது இருக்கிறது என்றார்.

## கோரிக்கையை மீறி ஆஸியில் போராட்டம்

ஆஸ்திரேலியாவில் போராட்டத்தில் கலந்து கொண்ட சிலருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இது போன்ற போராட்டங்களில் கலந்து கொள்ள வேண்டாம் என்று அந்த நாட்டுப் பிரதமர் ஸ்கொட் மோரிசன் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் அங்கு மறுபடியும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டக்காரர்கள் முகக் கவசங்களை அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டதுடன் சமூக இடைவெளியையும் பேணினர். பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு முன்னிலையில் இந்தப் போராட்டங்கள் அமைதியாக நடந்தன.

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு

### ஒருவர் பரிதாபச் சாவு



பாகிஸ்தானில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள சந்தைப்பகுதியில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் ஒருவர் உயிரிழந்தார். பாகிஸ்தானின் உயர்பாதுகாப்பு கொண்ட நகரமான ராவல்பிண்டியின் சத்தார் பகுதியில் உள்ள சந்தையில் இந்தச் சம்பவம் நடந்தது. இதில் 15 பேர் பலத்த காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். குண்டுவெடித்த பகுதியில் உள்ள கட்டுமானங்கள் கடுமையாகச் சேதமடைந்தன. இது பயங்கரவாதத்தின் முயற்சி என்றும், பொதுமக்களின் உயிருடன் விளையாடுவோர் சட்டத்தில் இருந்து தப்ப முடியது என்றும் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் எச்சரித்தார். கொரோனாவுக்கு எதிராக நாடு போராடிக்கொண்டிருக்கும் நிலையில், பயங்கரவாதம் தலைதூக்கியிருப்பது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.



## சசிகலா பற்றி யோசிக்கவே அ.தி.மு.கவுக்கு நேரமில்லை

### கடம்பூர் ராஜூ தெரிவிப்பு

சசிகலா பற்றி யோசிக்க நேரம் இல்லை. அது பற்றிய சிந்தனை அ.தி.மு.க. அரசுக்கு இல்லவே இல்லை என்று அமைச்சர் கடம்பூர் ராஜூ தெரிவித்தார். கோவில்பட்டி - வேலாயுதபுரம் ஈ.வே.ஏ.வள்ளிமுத்து நாடார் ஆரம்ப மற்றும் உயர் நிலைப் பாடசாலை மாணவர்களின் குடும்பத்துக்கு அத்தியாவசியப் பொருள்கள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசியபோதே அமைச்சர் கடம்பூர் ராஜூ இவ்வாறு தெரிவித்தார். சசிகலா விடுதலையாகி வந்தால் அ.தி.மு.காவில் சில மாற்றங்கள் ஏற்படுமா என்ற கேள்விக்குப் பதிலளிக்கும்போது அதைப் பற்றி யோசிக்க நேரமில்லை. கொரோனா வைரஸால் மக்களே பாதிக்கப்படும் நேரத்தில் அரசியல் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு இடமில்லை. அந்தச் சிந்தனையே அ.தி.மு.க அரசுக்கு இல்லை என்றார்.

## அரசு மீது ராகுல்காந்தி விமர்சனம்

கொரோனா வைரஸ் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் தவறான பந்தயத்தில் வெற்றி பெறுவதற்காகத் தேசம் பயணிக்கிறது என்று மத்திய அரசைக் காட்டமாக ராகுல் காந்தி விமர்சித்துள்ளார். கொரோனா வைரஸால் இந்தியாவில் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்தியாவில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 3 லட்சத்து 10 ஆயிரத்து 131 ஆக அதிகரித்துள்ளது. உலகளவில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நாடுகள் பட்டியலில் 5ஆவது இடத்திலிருந்த இந்தியா, பிரிட்டனைப் பின்னுக்குத் தள்ளி 4ஆவது இடத்துக்கு நகர்ந்தது. கொரோனாவுக்கு மோசமாக இந்தியா இலக்காகி வருவதைச் சுட்டிக்காட்டி மத்திய அரசை ராகுல் காந்தி விமர்சித்துள்ளார். தவறான பந்தையத்தில் வெற்றி பெறும்பாதையில் இந்தியா பயணித்து வருகிறது. ஆணவம் மற்றும் திறமையின்மையின் கலவையின் விளைவாக ஏற்பட்ட ஒரு பயங்கரமான சோக நிகழ்வு இது எனத் தெரிவித்துள்ளார்.

பனங்காட்டான்



# தேர்தலுக்கே உரித்தான புலிக்கோசமும் புலிப்பாசமும்!

தமிழ் மக்களின் ஆதரவின்றி எவராலும் ஆட்சியமைக்க முடியாது என்றிருந்த நிலைமையை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள, பௌத்த வாக்குகள் மாற்றிவிட்டன. இதனால் தமிழ் மக்களின் வாக்குகளை எத்திப்பெற புதுயுக்தியை கூட்டமைப்பு கையாள்கிறது. அதுதான், முன்னாள் போராளிகளை அணைப்பதும் அவர்களைப் போற்றுவதுமான திடீர் புலிப்பாசமும் புலிக்கோசமும். ஏமாறுபவன் இருக்கும்வரை ஏமாற்றுபவனும் இருப்பான் என்பது அரசியலுக்கே சாலப்பொருத்தம்.

மார்ச் மாதம் முதல்வாரம் கலைக்கப்பட்ட இலங்கை நாடாளுமன்றத்தின் பொதுத்தேர்தல் இரண்டு தடவை ஒத்தி வைக்கப்பட்டதன் பின்னர், ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறுமென அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

196 தொகுதிகள் ஊடாகத் தெரிவாகும் உறுப்பினர்களைத் தவிர மிகுதி 29 பேரும் தேசியப் பட்டியலூடாகத் தெரிவாவர்.

இருபது அரசியற் கட்சிகளும், முப்பதினான்கு சுயஇச்சைத் தரப்புகளுமென மொத்தம் 7,452 பேர்



இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

தேர்தலில் வாக்களிக்க 16,263,885 பேர் இடாப்பில் பதிவு பெற்றுள்ளனர். இவர்களுள் சுமார் 70 வீதமானவர்கள் வாக்களிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஏழு உறுப்பினர்களைத் தெரிவதற்கான யாழ்ப்பாண மாவட்டத்தில் (கிளிநொச்சி உட்பட) பத்தொன்பது அரசியற் கட்சிகளும், பதினான்கு சுயஇச்சைக் குழுக்களுமென 330 பேர் போட்டியிடுகின்றனர். இங்கு 571,848 வாக்காளர் உள்ளனர்.

வன்னி மாவட்டத்தில் (முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்) ஆறு உறுப்பினர்களைத் தெரிவு செய்ய பதினேழு அரசியற் கட்சிகள், 28 சுயஇச்சைக் குழுக்களுமென 405 பேர் போட்டியிடுகின்றனர். இங்குள்ள வாக்காளர் தொகை 287,024.

ஐந்து உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டிய மட்டக்களப்பு மாவட்டத்தின் வாக்காளர் எண்



ணிக்கை 409,808. இங்கு பதினாறு அரசியற் கட்சிகள், 22 சுயஇச்சைக் குழுக்கள் சார்பில் 304 பேர் போட்டியிடுகின்றனர்.

திருமலை மாவட்டத்தில் நான்கு பேர் தெரிவு செய்யப்படுவர். 288,868 வாக்காளர்கள் உள்ள இங்கு பதின்மூன்று அரசியற் கட்சிகள் மற்றும் பதினான்கு சுயஇச்சைக் குழுக்கள் சார்பில் 189 பேர் போட்டியிடுகின்றனர்.

திகாமடுல்ல எனும் அம்பாறை மாவட்டத்தில் ஏழு ஆசனங்களுக்காக இருபது அரசியற் கட்சிகள் மற்றும் 34 சுயஇச்சைக் குழுக்கள் சார்பில் 189 பேர் போட்டியிடுகின்றனர். இங்கு வாக்காளர் தொகை 513,929.

ஆகக்கூடியதாக இருபது வரையான தமிழர்களை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யக்கூடியதாக எதிர்பார்க்கப்படும் வடக்கு, கிழக்கின் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் தேர்தல் திருவிழா கொடியேறியுள்ளது.

அதற்கு நிகராக தெற்கும் மேலெழுந்துள்ளது. கடந்த வருட ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள, பௌத்த மக்களின் வாக்குகளால் பெற்ற வெற்றியி லும் பார்க்க அதிகூடிய மெகாவெற்றியைப் பெறும் இலக்குடன் மஹிந்தவின் முன்னணி களத்தில் இறங்கியுள்ளது.

மூன்றிலிரண்டு பெரும்பான்மையை (150) பெறும் இலக்குடன் மஹிந்த - கோட்டாபய சகோதரர்கள் தேர்தல் குதிரையை ஓட்ட ஆரம்பித்துள்ளனர். இது கிடைக்குமானால் பத்தொன்பதாவது திருத்தத்தை ரத்துச் செய்வது அவர்கள் எதிர்பார்ப்பதுபோல இலகுவான காரியம்.

சிங்களத் தரப்பில் மாற்றுத் தலைமையாக இதுவரை இருந்து வந்த ஐக்கிய தேசிய கட்சி இரண்டாகப் பிளவுபட்டுள்ள சூழ்நிலையை சரியாகப் பந்தாட மஹிந்த அணி வியூகம் வகுத்துள்ளது.

ரணில் அணியும், சஜித் அணியும் தப்பித்தவறி மீண்டும் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிட்டால் கூட ஆட்சியைக் கைப்பற்ற முடியாதிருக்கும் சமகால அரசியற் போக்கு மஹிந்த தரப்புக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதம்.

கடந்த காலத் தேர்தல்களின்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதிமுக்கியமான ஓர் அம் சத்தை முன்னிறுத்தி தமிழ் மக்களிடம் பெரும் பான்மை வாக்குக் கேட்பது வழக்கம்.

சிங்கள மக்களின் வாக்குகள் எப்போதும் இரண்டாகப் பிளவுபடுவதால் தமிழரின் ஆதரவின்றி எந்தவொரு சிங்களக் கட்சியும் ஆட்சியமைக்க முடியாதென்பதால், கூட்டமைப்பு பேரம் பேசும் சக்தியாக பலமுடன் வெற்றி பெற தமிழ் மக்கள் ஏகோபித்து தங்கள் வாக்குகளை கூட்டமைப்புக்கு வழங்க வேண்டுமென்பது இவர்களது கடந்த காலக் கோரிக்கையாக இருந்தது.


ஆனால், கடந்த வருட ஜனாதிபதித் தேர்தல் இதனைப் பொய்யாக்கி விட்டது.

தமிழரின் ஆதரவு மட்டுமன்றி முஸ்லிம்களின் ஆதரவுகூட இல்லாது தங்களால் ஆட்சியைக் கைப்பற்ற முடியுமென்பதை சிங்கள பௌத்த பேரினவாதம் கோட்டாபயவின் வெற்றியினூடாக நிரூபித்துக் காட்டியது. இது இலங்கையின் அரசியல் வரலாற்றில் தனிச்சிங்கள ஆட்சியென்ற புதிய சகாப்தத்தை உருவாக்கியது.

இந்தப் பின்புலத்தில், ஓகஸ்ட் 5 ஆம் திகதிய தேர்தலைச் சந்திப்பது கூட்டமைப்புக்கு புதியதொரு அனுபவம். அதுமட்டுமன்றி தமிழர் தாயகத்தில் மாற்று அணிகள் (மாற்றுத் தலைமையன்று) பலமான போட்டியாளர்களாக இத்தேர்தலில் களம் இறங்குவது கூட்டமைப்புக்கான சவாலாகவும் பார்க்கப்படுகிறது.

வடமாகாண சபை முதல்வராக இருந்த சி.வீ.விக்கினேஸ்வரன் தலைமையிலான புதிய அணி வடக்கைப் பொறுத்தளவில் கூட்டமைப்புக்கு உண்மையாகவே ஒரு தலையிடியாக மாறியுள்ளது. அதேசமயம், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையிலான தேசிய முன்னணி களத்தின் பெறுமானமுள்ள இன்னொரு போட்டியாளராக நிற்கின்றது.

(08 ஆம் பக்கம் பார்க்க)



சிங்கள மக்களின் வாக்குகள் எப்போதும் இரண்டாகப் பிளவுபடுவதால் தமிழரின் ஆதரவின்றி எந்தவொரு சிங்களக் கட்சியும் ஆட்சியமைக்க முடியாதென்பதால், கூட்டமைப்பு பேரம் பேசும் சக்தியாக பலமுடன் வெற்றி பெற தமிழ் மக்கள் ஏகோபித்து தங்கள் வாக்குகளை கூட்டமைப்புக்கு வழங்க வேண்டுமென்பது இவர்களது கடந்த காலக் கோரிக்கையாக இருந்தது. ஆனால், கடந்த வருட ஜனாதிபதித் தேர்தல் இதனைப் பொய்யாக்கி விட்டது.

# இயக்கச்சி பகுதியில் மக்கள் வீதி மறியல்

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி கொற்றாண்டகுளம் பிரதேச மக்கள் வீதி மறியல் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டம் நேற்றுச் சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் பிரதேச மக்களால் கட்டைக்காடு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக கிரவல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனங்கள் மறிக்கப்பட்டு இடம்பெற்றது.

கொற்றாண்டகுளம் பகுதியில் அமைக்கப்பட்ட பாலத்தின் ஊடாக கிரவல் எடுத்துச் செல்வதால் பாலம் சேதமடைந்து வருவதாகவும், இந்த வீதியால் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்படும் எனவும் மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் அபிவிருத்திப் பணிகளுக்காக கிரவல் எடுத்துச் செல்லும்போது இந்த வீதியைப் பயன்படுத்த வேண்டாம் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, அப்பகுதிக்குச் சென்ற பளை பொலிஸார் பொதுமக்கள் மற்றும் வாகன உரிமையாளர்களுடன் நீண்டநேரம் பேச்சில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, அபிவிருத்தி இடம்பெறும் பகுதிக்கு கிரவல் எடுத்துச் செல்வதற்கு மாற்று பாதையைப் பயன்படுத்துவதாக இணக்கம் காணப்பட்டதைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.





## படுகொலை செய்யப்பட்ட

# சுனில் ஜயவர்தனவுக்கு வவுனியாவில் அஞ்சலி!





வவுனியா, ஜூன் 14

அகில இலங்கை ஓட்டோ சேவையாளர் சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவர்தனவுக்கு வவுனியாவில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வவுனியா ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் அவரது திருவுருவப் படத்துக்கு மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் ஓட்டோ சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதனிடையே, வவுனியா மாவட்டத்தில் உள்ள ஏனைய ஓட்டோ தரிப்பு நிலையங்களிலும் இந்த அஞ்சலி நிகழ்வு நேற்று மாலை அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.



இதேவேளை, சுனில் ஜயவர்தன அண்மையில் தாக்குதலுக்கு உள்ளாகிப் படுகொலை செய்யப்பட்டமைக்குக் கடும் கண்டனம் தெரிவிப்பதாக வவுனியா ஓட்டோச் சங்கம் தெரிவித்துள்ளது.

# தேர்தலுக்கே உரித்தான புலிக்கோசமும் ............

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் இவை இரண்டையும் அவதானமாகக் கையாள வேண்டிய விடயத்தில் அதீத கவனம் செலுத்த வேண்டியுள்ள கூட்டமைப்புக்கு, அவர்களின் உள்வீட்டுக்குள் உருவாகியுள்ள சுமந்திரன் எதிர்ப்பலையை கையாளுவது ஒரு சவாலாகவே அமைந்துள்ளது.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தே சமூக ஊடகங்கள் வழியாக சுமந்திரன் மீதான தாக்குதல் கூட்டமைப்பின் ஒரு குழுவினரால் மின்னல் வேகத்தில் நடத்தப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த சில எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டனவாயினும் தமிழரசுச் கட்சியின் சில முன்னாள் எம்.பிக்கள் தொடர்ந்து சுமந்திரனை இலக்கு வைத்து தங்கள் கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

தமிழ் மக்கள் பிரச்சினைத் தீர்வு, புதிய அரசமைப்பு, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் என்பவற்றுக்கு அப்பால் பொதுமக்கள் மத்தியில் கூட்டமைப்பு மீது ஏற்பட்டிருக்கும் அதிருப்தி இன்னொரு அலையாகக் காணப்படுகிறது.

இதிலிருந்து தற்காலிகமாக விடுபட ஏதாவது புதிய உபாயத்தைக் கையாள வேண்டிய சூழ்நிலைக்கு கூட்டமைப்பு தள்ளப்பட்டுள்ளது. இப்போதைக்கு அவர்களுக்குக் கிடைத்துள்ள ஆயுதம் முன்னாள் போராளிகள்.

இவர்களைத் தங்கள் பக்கம் இழுப்பது, இவர்களுக்காகக் குரல் கொடுப்பது, இவர்கள் தங்களோடுதான் உள்ளனர் என்றவாறு காட்டுவது என்பவற்றில் கூட்டமைப்பினர் ஆர்வம் காட்ட ஆரம்பித்துள்ளனர்.

இதுவரை தொடங்கிய சகல முன்னெடுப்புகளிலும் பிசுபிசுத்துப் போன நிலையிலுள்ள தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகள் அனைவரையும் ஒன்றிணைந்து தங்களுடன் வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். இதன் மூலம் ஓரளவுக்கு தங்கள் வாக்கு வங்கியை தக்க வைக்கலாமென்பது இவரது கணிப்பு.

சில வாரங்களுக்கு முன்னர் சிங்கள தொலைக்காட்சி செவ்வி ஒன்றில் விடுதலைப் புலிகளின் போராட்டத்தை தாம் ஏற்றுக் கொள்ளவில்லையென்று கூறி, இதனை எங்கும் எப்போதும் துணிந்து கூறுவேன் என்று மார்பு தட்டிய சுமந்திரன் இப்போது தேர்தல் காய்ச்சலால் போலும் சடுதியாக குதத்துக்கரணம் அடித்துள்ளார்.

தமிழினத்தின் விடிவுக்காகப் போராடிய முன்னாள் போராளிகளின் பங்களிப்பு தீர்வு நோக்கிய இன்றைய தங்களின் போராட்டத்துக்கு அத்தியாவசியமானது என்றும், அவர்களை தமிழரசுக் கட்சியில் இணைத்துக் கொள்ள வேண்டுமென்றும் இந்த வாரம் கூறியுள்ளார்.

இங்கு இவர் கையாண்டுள்ள வார்த்தைப் பிரயோகம் கவனிக்கப்பட வேண்டியது. தேர்தல் முடிந்த பின்னர், இன்னொரு சந்தர்ப்பத்தில் இதனைக் குறிப்பிடும் போது அவர்களை விடுதலைப் புலிப் போராளிகள் என்று குறிப்பிடவில்லையென்றும் முன்னாள் போராளிகள் என்றே குறிப்பிட்டேன் என்று விளக்குவதற்கான முன்னெச்சரிக்கையாக சுமந்திரனின் வார்த்தைப் பிரயோகத்தைப் பார்க்க முடிகிறது.

தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையில் சில வருடங்களுக்கு முன்னர் முன்னாள் போராளிகளைச் சேர்த்துக் கொள்ள தீர்மானம் வந்தபோது தாம் ஒருவர் மட்டுமே அதனை ஆதரித்ததாக சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

இதனை முற்றாக மறுக்கும் காணொளி ஒன்றை தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள பிரபல சட்டவாளர் தவராசா வெளியிட்டுள்ளார்.

கொழும்புக் கிளையில் அன்று முன்னாள் போராளிகளை இணைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டவேளை அதற்கு ஆதரவு வழங்காத ஒரே ஒரு நபர் சுமந்திரன் தான் என்பதை இவர் வெளிப்படுத்தியுள்ளார்.

தேர்தல் நெருங்கும் வேளையில் முற்றுமுழுதாக உண்மைக்குப் புறம்பான, ஆதரமற்ற, அரசியல் நோக்கம் கொண்ட, தனது சுயநலத்துக்காக அப்பட்டமான பொய்யை சுமந்திரன் கூறியுள்ளதாக சட்டவாளர் தவராசாவின் வாய்மூலம் வெளிப்படுத்துகிறது.

அண்மைக் காலங்களில் சுமந்திரனின் பல அறிக்கைகளும் கூற்றுகளும் முன்னுக்குப் பின் முரணாகவும் உண்மைக்குப் புறம்பானதாகவும் அமைந்துள்ளன. கூட்டமைப்பின் முன்னாள் எம்.பிகளில் ஒருவர்கூட சுமந்திரனுக்கு ஆதரவாக இயங்க முடியாத நிலை காணப்படுகிறது.

தமிழ் மக்களின் ஆதரவின்றி எவராலும் ஆட்சியமைக்க முடியாது என்றிருந்த நிலைமையை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள,பௌத்த வாக்குகள் மாற்றிவிட்டன. இதனால் தமிழ் மக்களின் வாக்குகளை எத்திப் பெற புதுயுக்தியை கூட்டமைப்பு கையாள்கிறது.

அதுதான், முன்னாள் போராளிகளை அணைப்பதும் அவர்களைப் போற்றுவதுமான திடீர் புலிப்பாசமும் புலிக்கோசமும். ஏமாறுபவன் இருக்கும்வரை ஏமாற்றுபவனும் இருப்பான் என்பது அரசியலுக்கே சாலப்பொருத்தம்.

நன்றி: 'பதிவு' இணையம்.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# பூநகரியில் மக்களின் காணிகளை பறிக்கும் வனவளத் திணைக்களம்

## நீதிமன்றில் தீர்வைப் பெறுவோம் என சட்டத்தரணி மணிவண்ணன் உறுதி





கிளிநொச்சி, ஜூன் 14

பூநகரி கிராஞ்சி மொட்டையன் குளம் கிராமத்தைச் சேர்ந்த மக்களின் காணிகளை வனவளத் திணைக் களம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சி களை எடுத்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக் கான நிவாரணத்தை நீதிமன்றின் ஊடாகப் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பார் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் உறுதியளித்துள்ளார்.

பூநகரி கிராஞ்சி மொட்டையன் குளம் கிராமத்தில் மக்களுக்குரிய காணிகளை வனவளத் திணைக்கள அதிகாரிகள் தமது திணைக் களத்துக்குரிய காணிகள் என அடையா ளப்படுத்தினர். பொதுமக்களை காணிக ளுக்குள் செல்லவிடாது அவர்கள் தடுத் தனர். அதனால் அங்கு மக்கள் மத்தி யில் குழப்ப நிலை ஏற்பட்டது.

பொது மக்கள் சிலருக்கு எதிராக வனவளத் திணைக்கள அதிகாரிகளால் நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. இதனை அடுத்து பொது மக்களின் அழைப்பை ஏற்று தமிழ்த் தேசிய மக் கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர், சட்டத் தரணி விஸ்வ லிங்கம் மணிவண்ணன் சம்பவ இடத் துக்கு நேற்றுச் சென்றார். அங்கு அவர் இடங்களைப் பார்வையிட்டு மக்களு டன் கலந்துரையாடினார்.

மக்களின் பாதிப்புகளைக் கேட்ட றிந்து உரிய சட்ட நடவடிக்கைகளைத் தான் மேற்கொள்வதாக சட்டத்தரணி வி.மணிவண்ணன்வாக்குறுதிவழங்கினார். கிளிநொச்சி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நாளை திங்கட்கிழமை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப் படும் போது சட்ட உதவி வழங்குவார் எனவும் அவர் கூறினார்.



# திருத்தந்தையின் மெய்க்காவலர்களாகப் பணியாற்றும் சுவிஸ் கார்ட்ஸில் இளையோரை இணைக்கும் நிகழ்வு



திருத்தந்தையரின் மெய்க்காப்பாளர்களாகப் பணியாற்றும் சுவிஸ் கார்ட்ஸ் என்ற அமைப்பில் இளையோரை புதிதாக இணைக்கும் நிகழ்வு 04 அக்டோபர் 2020 அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக மே மாதம் 6ஆம் திகதி நடைபெற்று வந்த இந்நிகழ்வு கொவிட் தொற்றுக்கிருமி நெருக்கடியால் 04 அக்டோபர் அன்று இத்தாலியின் பாதுகாவலராகக் கருதப்படும் அசிசி நகர் புனித பிரான்சிஸ் திருநாளன்று நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு நடைபெறும் இந்த விழாவில் 38 புதிய காவல் வீரர்கள் இப்பணியில் இணைக்கப்படுவர் என்றும், கொவிட் 19 தொற்றுக்கிருமியால் விதிக்கப்பட்டுள்ள தடைகள் காரணமாக இந்நிகழ்வு பெற்றோர், உற்றார் எனப் பங்கேற்பாளர்கள் யாருமின்றி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் 04 ஞாயிறன்று காலை 7.30 மணிக்கு புனித பேதுரு பெருங்கோவிலில் நடைபெறும் திருப்பலியுடன் இந்நாள் தொடங்கும் என்றும் மாலை 5 மணிக்கு வத்திக்கான் புனித தமசு வளாகத்தில் உறுதி மொழி எடுக்கும் நிகழ்வு நடைபெறும் என்றும் இவ்விரு நிகழ்வுகளும் வத்திக்கான் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1527 ஆம் ஆண்டில் உரோம் நகர் சூறையாடப்பட்டபோது திருத்தந்தை 7ஆம் கிளமெண்ட் அவர்கள், பாப்பிறை மாளிகையை விட்டுத் தப்பித்துச் செல்வதற்காகப் போராடிய 189 சுவிட்சர்லாந்து படைவீரர்களில் 147 பேர் உயிரிழந்தனர். இந்தப் படைவீரர்கள் உயிரிழந்த மே 6ஆம் நாளன்று ஒவ்வோர் ஆண்டும் வத்திக்கானில் புதிய சுவிஸ் காவல் வீரர்கள் உறுதி மொழி எடுத்து, பணியில் சேருவது வழக்கம். சுவிஸ் கார்ட்ஸ் என்ற பெயரில் இயங்கி வரும் திருத்தந்தையின் மெய்க்காப்பாளர்கள் திருத்தந்தை நிகழ்த்தும் திருவழிபாடுகள் பொதுச் சந்திப்புக்கள் போன்ற நிகழ்ச்சிகளில் அவருக்குப் பாதுகாப்பு அளிக்கின்றனர். இன்னும் வத்திக்கான் மாளிகையையும் பாதுகாக்கின்றனர்.



## பதுவை நகர் புனித அந்தோனியாரின் திருத்தலத்தில் பூச் சொரிந்த ஹெலி!

இத்தாலி, பதுவை நகர் புனித அந்தோனியார் திருநாளன்று இப்புனிதரின் ஆசீரைக் குறிக்கும் வண்ணம் ஹெலிக்கொப்டர் வழியே பதுவை நகரிலும் சுற்றிலும் உள்ள பகுதிகளிலும் மலர்கள் தூவப்பட்டன. ஜூன் 13 சனிக்கிழமை பதுவை நகர் புனித அந்தோனியார் திருநாள் சிறப்பிக்கப்பட்மை ஏனைய ஆண்டுகளைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்ட ஒரு திருநாளாக இருந்தது எனத் தெரிவித்து பதுவை புனித அந்தோனியார் திருத்தலத்தின் பொறுப்பாளரான குருவானவர் செய்தியொன்றை வெளியிட்டுள்ளார்.

கடந்த பல நூற்றாண்டுகளாக இத்திருநாளன்று பதுவை நகரைச் சுற்றி புனித அந்தோனியாரின் திரு உருவம் எடுத்துச் செல்லப்படும் மிக ஆடம்பரமான பவனி இவ்வாண்டு நடைபெறவில்லை. அதற்குப் பதிலாக இப்புனிதரின் ஆசீரைக் குறிக்கும் வண்ணம், ஹெலிக்கொப்டர் வழியே நகரெங்கும் மலர்கள் தூவப்பட்டன.

பதுவை நகரையும் அதைச் சுற்றிலும் உள்ள பகுதிகளையும் ஒரு சூறாவளியாகத் தாக்கியுள்ள கோவிட் 19 தொற்றுக்கிருமியின் கொடுமைகளிலிருந்து இறைவன் மக்களைக் காக்குமாறு புனித அந்தோனியாரின் பரிந்துரையை வேண்டி இம்மலர்கள் தூவப்பட்டமை குறிப்படத்தக்கது.

இந்த நோயால் பாதிக்கப்பட்ட பலரைக் கொண்டுள்ள மருத்துவமனை மற்றும் இந்த நோயினால் மிக அதிக அளவு பாதிக்கப்பட்ட பகுதிகளில் இப்புனிதரின் பரிந்துரை வழியே ஆசீர் பொழியப்படுமாறு தனிப்பட்ட முறையில் மலர்கள் சொரியப்பட்டன என்றும் திருத்தலத்தின் பொறுப்பாளர் கூறியுள்ளார்.

இந்தக் கொள்ளை நோயின் தாக்கத்திலிருந்து நாம் அனைவரும் மறுபடியும் எழுந்து மன உறுதியுடன் வாழவைத் தொடரவேண்டும் அழைப்பு விடுத்துள்ள பொறுப்பான குருவானவர் இளையோர் இவ்வுலகை மீண்டும் கட்டியெழுப்பும் பணியை, ஆர்வமுடன் மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

## நியுசிலாந்தில் ஜூன் 21 ஆம் திகதி புலம்பெயர்ந்தோர் நாள் அனுஷ்டிப்பு

உன் சகோதரன் சகோதரி எங்கே? (தொ.நூ.4 - 9) என்ற தலைப்பில் இம்மாதம் 21ஆம் திகதி ஞாயிறன்று புலம்பெயர்ந்தோர் மற்றும் குடிபெயர்ந்தோர் நாள் கடைப்பிடிக்கப்படுவதாக நியுசிலாந்து கத்தோலிக்க ஆயர் பேரவை அறிவித்துள்ளது. இவ்வாண்டில், கொவிட் - 19 கொள்ளைநோயால் உலகினர் பாதிக்கப்பட்டிருக்கும் வேளை புலம்பெயர்ந் தோர் அனுபவிக்கும் துன்பங்களை நினைத்து, இந்நாளில் அவர்களுக்காகச் சிறப்பாக இறைவனை மன்றாடுமாறு, ஆயர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நற்செய்தியின் மகிழ்வு என்று பொருள்படும் என்ற திருத்தூது அறிவுரை மடலில் விடுத்துள்ள அழைப்பிற்கேற்ப புலம்பெயர்ந்த மக்களை நம் சகோதரர், சகோதரிகளாக நோக்குமாறு, நியுசிலாந்து ஆயர்கள், விசுவாசிகளைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கொரோனா தொற்றுக்கிருமியால் உருவாக்கப்பட்டுள்ள நலவாழ்வு நெருக்கடியில் நலிவடைந்த மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இக்கொள்ளைநோயால், புலம்பெயர்ந்தோரில் பத்துக்கு ஒருவர் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர் என்றும் ஆயர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

21 ஜூன் அன்று கடைப்பிடிக்கப்படும் புலம்பெயர்ந்தோர் மற்றும், குடிபெயர்ந்தோர் நாளில் நியுசிலாந்து கத்தோலிக்கர் நம்பிக்கை மற்றும் ஆர்வமுடன் பங்கெடுக்குமாறு ஆயர்களின் அறிக்கை அழைப்பு விடுத்துள்ளது.

## ஆனைக்கோட்டை அடைக்கல அன்னை ஆலயப் பங்குபணிமனையின் திறப்பு விழா

*யாழ் மறைமாவட்ட ஆனைக்கோட்டை அடைக்கல அன்னை ஆலயத்தின் புனரமைப்பு செய்யப்பட்ட பங்குப் பணிமனை 06 ஜூன் 2020 அன்று யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது.*

*பங்குப்பணிமனைப் புனரமைப்பு பணியில் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அன்பு நெஞ்சங்களையும் பங்குத் தந்தை அலின் கருணாகரன் அடிகளாரையும் அன்புடன் வாழ்த்தி அடைக்கல அன்னையின் ஆசி வேண்டுவோம்.*

## கிறிஸ்துவின் திருஉடல் திருஇரத்தம் பெருவிழா திருப்பலி இன்று



இன்று 14 ஜூன் 2020 அன்று சிறப்பிக்கப்படும் கிறிஸ்துவின் திருஉடல் திருஇரத்தம் பெருவிழாத் திருப்பலியை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வத்திக்கான் பேதுரு பெருங்கோவிலில் நிறைவேற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திருப்பலியில் கோவிட் – 19 விதிமுறைகளின்படி ஏறத்தாழ ஐம்பது விசுவாசிகள் பங்குகொள்வார்கள் என்றும் இத்திருப்பலியின் இறுதியில் திருநற்கருணை ஆராதனையும் ஆசீரும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இன்று உரோம் நேரம் காலை 9.45 மணிக்கு, அதாவது இந்திய –இலங்கை நேரம் பகல் 1.15 மணிக்கு இந்தப் பெருவிழா திருப்பலியைத் தொடங்குவார் என்றும் இத்திருப்பலி சமுதாய ஊடகங்கள் வழியாக வத்திக்கான் ஊடகத்துறையால் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.




நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் **‘ஒற்றுமை’**எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

இந்த இரண்டு சித்திரங்களும் இறுதிப் போட்டிகுத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு –**‘பலம்’**





படம் 2
வி. சலோமி - தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி




த. கபிலாஷ் - தரம் 8
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

லனுஜன் நவரட்ணம் - தரம் 3
North Bridlewood Junior Public School, Scarboough, Canada

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

இ. கார்த்திகன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

ஆர். பிரிதி - தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ராமதாசன் ஹர்சிகா - தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

கே. நிருஜிகா - தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

என். வித்யாசாகர் - தரம் 9
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஏ அக்ஷயன் - தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஏ. அனன்யா - தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

டி. அபிலாஷ் - தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

ஏ ஷிரோனி - தரம் 8
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ச. பவினா - தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

எஸ். ஆ. எஸ். பர்வின் - தரம் 8
ஹிஜ்ரா முஸ்லிம் கனிஷ்ர வித்தியாலயம், அம்பன்பொல

இ. லதுன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

ஞா. ரிசாந் - தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி





# தேர்தல் ஏற்பாடுகள் குறித்து மட்டு. தமிழரசுவினர் ஆராய்வு

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ளப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சிக் கிளைகளின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் நேற்றைய தினம் கட்சிப் பணிமனையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், வேட்பாளருமாகிய கி.துரைராசசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன்.செல்வராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், பா.அரியநேத்திரன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மா.நடராசா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ், மாநகர முதல்வர், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள், உள்ளூராட்சி உறுப்பினர்கள், வேட்பாளர்களான மா.உதயகுமார், இரா.சாணக்கியன், கிளைகளின் பிரதிநிதிகள், வாலிபர் முன்னணித் தலைவர் கி.சேயோன், வாலிபர் முன்னணி மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் லோ.தீபாகரன் உட்பட வாலிபர் முன்னணியினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது வேட்பாளர்களின் செயற்திட்டங்கள், கட்சியினால் மேற்கொள்ளப்படவுள்ள பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டமையுடன், உறுப்பினர்களின் கருத்துக்களும் பரிமாறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழக வளாகங்களுக்குள் விளையாட்டு நிகழ்வுகளுக்கு தடை

கொழும்பு, ஜூன் 14

மறு அறிவித்தல் வரை மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு உள்ளே அல்லது வெளியே ஒன்று கூடுவதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மறுஅறிவித்தல் வரை பல்கலைக்கழக வளாகங்களுக்குள் பொழுதுபோக்கு நிகழ்வுகள் அல்லது விளையாட்டு நடவடிக்கைகள் எவையும் அனுமதிக்கப்படாது என்று ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

அனைத்து பல்கலைக்கழகங்களின் இறுதி வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் இந்த மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. இது ஒகஸ்ட் 15 ஆம் திகதி முடிவடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

இருப்பினும், மருத்துவபீடப் பரீட்சைகள் நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகும் என்று பேராசிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டார்.

# ரயில் மோதி இளைஞன் பலி!

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சி - இரணைமடு சந்தி ரயில்வே கடவையில் நேற்று முன் தினம் இரவு 10.30 மணியளவில், இடம்பெற்ற விபத்தில், இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி அறிவியல் நகரைச் சேர்ந்த தர்சன் என்ற இளைஞனே, மரணமடைந்துள்ளார். இவர் ஒரு காலை இழந்தவர் என்றும், பாதுகாப்பற்ற கடவையைக் கடக்க முனைந்தபோது, தவறி விழுந்து, ரயில் மோதியிருக்கலாம் எனவும் அப்பகுதி மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.


## நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

## திருமதி.பினாகபாணி நீலாம்பிகை (சக்கரை ரீச்சர்)

(முன்னாள் ஆசிரியை, மானிப்பாய் இந்துக் கல்லூரி)



வண்ணார்பண்ணை, 62/2, இந்துக் கல்லூரி ஒழுங்கையைப் பிறப்பிடமா கவும், வசிப்பிடமாகவும் கொண்ட நீலாம்பிக்கை பினாகபாணி நேற்று புதன்கிழமை (03.06.2020) காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம், நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பினாகபாணியின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வள்ளிநாயகி, வாலாம்பிகை, வைத்தீஸ் வரன், சர்வலோகநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகராஜா, காலஞ்சென்றவர்களான அரியரத்தினம், தங்கராணி ஆகியோரின் மைத் துனியும், அரியகுமார் - பகீரதி, வசந்தமாலா - கணேசராஜா, வசந்தகுமாரி - காண்டீபன், முரளிதரன் - ஸ்ரீபவானி, ஸ்ரீதரன் - சேய்மணி, காலஞ்சென்றவர் களான அசோகமலர், அசோக்குமார் - லிங்கேஸ்வரி ரேணுகா, பாலராஜன் - பூங்கோதை, மஞ்சுளா - குகேந்திரன், கௌசல்யாதேவி-வருணா ஆகி யோரின் சிறிய தாயாரும், பகீரதி - அரியகுமார், ராஜ்குமார் - மஞ்சுளா, ராஜராஜன் - சங்கீதா ஆகியோரின் மாமியாரும், கார்த்திக் - விதுஷினி, காயத்திரி, கிரிஷாந் - நிஷானி, இந்துஜா -கிரிஷாந்த், றனுஷா, றோஜனா, தர்வின்குமார், பாரதிநேயன், சிவ பைரவி, ராதா - ரொஜ் திக்கேரியஸ், ஆஷ்லி - பாலக், அபிராமி, மதுரா, லஷ்மி, தர்ஷன், கஜோஷன், சௌமியா, அக்ஷயா, ஆரோதனா, சுலக்ஷனா, ஹம்சனா ஆகியோரின் பேர்த்தியும், அலெக்சான்டர் ஆர்ஜனா, மானசா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த (04.06.2020) வியாழக்கிழமை மதியம் 2.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது நேரில் கலந்து கொண்டவர்களும், தொலைத் தொடர்பு மூலமாக அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும், மலர் வலையம், மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் குடும்பத்தினரான நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் 16 ஆம் நாள் வீட்டுக் கிருத்திய கிரியைகள் எதிர் வரும் 18.06.2020 வியாழக்கிழமை மதியம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

தகவல்:- குடும்பத்தினர்

"சன்முக வாசா" இல.62/02 இந்துக்கல்லூரி ஒழுங்கை வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பேசி - 021 222 8694, 0112716624, 0112361861, 077 515 5979

# தேர்தலுக்கான புதிய விதிமுறைகள் நடைமுறைச் சாத்தியமே அற்றவை!

## எதிரணி சார்பில் லக்ஷ்மன் கிரியல்ல காட்டம்

பொதுத்தேர்தலை நடத்துவது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சட்டத்திட்டங்கள் நடைமுறை சாத்தியமற்றவை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளரும், முன்னாள் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பொதுத்தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் தேர்தல் சம்பந்தமாக விதிமுறைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை நடைமுறைக்கு சாத்தியமற்றவையாகவே இருக்கின்றன.

குறிப்பாகப் பிரசாரத்தை முன்னெடுப்பதற்கான சுதந்திரம் இருக்கவேண்டும். கூட்டத்துக்கு 100 பேர் அல்லது 500 பேர் வருவார்களாக இருந்தால் அவர்களின் பெயர்பட்டியலை வழங்கவேண்டுமாம். இதனை செய்யமுடியுமா?

எனவே தேர்தல் தொடர்பில் தெளிவில்லாத, அனுபவம் அற்றவர்களே இவ்வாறான விடயங்களை செய்துள்ளனர். சமூக இடைவெளியைப் பின்பற்றி வாக்களிப்பு நடைபெறுமானால் வரிசையானது ஒரு கிலோமீற்றரையும் தாண்டிச் செல்லும்.



எனவே, அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடிய பின்னரே இவற்றை உருவாக்கியிருக்கவேண்டும். அவ்வாறு கலந்துரையாடல் இடம்பெற்றிருக்குமானால் சிறப்பான யோசனைகளை முன்வைக்ககூடியதாக இருந்திருக்கும். - என்றார்.

அதேவேளை இது தொடர்பில் ஆளுங் கட்சி உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

தேர்தல் கூட்டங்களுக்கு வருபவர்களின் பெயர் பட்டியலை சுகாதார பரிசோதகர்களுக்கு வழங்கவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும் சில நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன. இவை நடைமுறை சாத்தியமற்றவை. அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடாமல் இவ்வாறான முடிவுகளை எடுக்கமுடியாது. - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## திருமலை பஸ் நிலையத்தில் இருந்து சிறுமியை இழுத்துச் சென்ற மர்ம நபர்

திருகோணமலை மத்திய பஸ் நிலையத்தில் நேற்று நண்பகல் ஒரு சிறுமியை இழுத்துச் சென்ற மர்மநபர் ஒருவரைப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:-

தனது உறவினருடன் பஸ் நிலையத்திற்கு வந்த 8 வயது மதிக்கத்தக்க சிறுமி தாகமாக இருக்கிறார் எனத் தனது உறவினரிடம் தெரிவித்தமையை அடுத்து, சிறுமியின் உறவினர்கள் அங்குள்ள கடை ஒன்றில் தண்ணீர் போத்தல் வாங்குவதற்காக சிறுமியை ஓரிடத்தில் நிற்குமாறு கூறிவிட்டு கடைக்குச் சென்றுள்ளார்.

கடையில் தண்ணீர் போத்தலை வாங்கிய பின்னர் வந்து பார்த்தபோது சிறுமி அவ்விடத்தில் இல்லாததால் பதற்றமடைந்த சிறுமியின் உறவினர்கள் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர்.

அதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளை அடுத்துஅந்தச் சிறுமியுடன் கதைத்துக்கொண்டிருந்த சந்தேகநபர் ஒருவர் சிறுமியை இழுத்துச்செல்லும் காட்சி அங்குள்ள பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ளது.

எனவே சிறுமியை ஒருவர் வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றிருக்கின்றார் என்ற அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கின்றமையோடு அந்நபரையும் தேடி வருகின்றனர்.

சம்பவம் நடைபெற்ற சற்று மணி நேரங்களின் பின்னர் திருகோணமலை சங்கமித்தை கடற்கரைப் பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் ஒரு சிறுமி அழுதுகொண்டிருப்பதை அவதானித்த பொது மக்கள் பொலிஸாரிடம் அறிவித்ததை அடுத்து திருகோணமலை தலைமையக பொலிஸார் அந்தச் சிறுமியை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரனைகளை திருகோணமலை தலைமையகப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சுற்றுலாத்துறையை மீளக்கட்டியெழுப்ப நிவாரணம் வழங்குவதற்கு அரசு முடிவு

முற்றிலுமாக முடங்கிப் போயிருக்கும் சுற்றுலாத் துறையை மீளக் கட்டியெழுப்பவும், பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத்துறை சேவையாளர்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரசு தீர்மானித்துள்ளதாக பிரதமர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் - 19 வைரஸ் பரவல் தாக்கத்தின் காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறையை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பான பேச்சு நேற்று (வெள்ளிக்கிழமை) அலரி மாளிகையில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் சுற்றுலாத்துறை சேவையினை வழங்கும் நிறுவனத்தினர் கலந்துக்கொண்டார்கள்.

குறித்த சந்திப்பையடுத்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சுற்றுலாப் பயணிகளுக்கான வீசா கட்டணம், உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை சேவை வழங்கல், வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் நாட்டுக்கு வருகைத்தரும் போதும் சுற்றுலா மையங்களைப் பார்வையிடும் போதும் பின்பற்ற வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

சுற்றுலாத்துறை சேவையில் ஈடுப்படும் நிறுவனங்கள் கொவிட் - 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அரசு அறிவுறுத்தியுள்ள சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைக் கடுமையாகப் பின்பற்றவேண்டும். வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறை சேவையினைத் துரிதமாக கட்டியெழுப்புவது இதன் முதன்மை இலக்காகும்.

சுற்றுலாப் பயணிகளின் வீசாக் கட்டணத்தை 35 டொலருக்குள் வைத்துக்கொள்ளுமாறு குறிப்பிட்ட பிரதமர் சுற்றுலாத்துறையை துரிதமாக கட்டியெழுப்பவும், சேவையில் ஈடுப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது எனவும் குறிப்பிட்டார். நாட்டில் உள்ள பிரதான சுற்றுலா மையங்களில் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் சேவை வழங்குநர்கள் இவ் விடயத்தில் அதிக அவதானம் செலுத்த வேண்டும் என உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரோஹிதவுக்கு அழைப்பு

கொழும்பு, ஜீன் 14

அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு முன்னாள் அமைச்சர் ரோஹித போகொல்லாகமவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி, ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள், தமக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டன என ரோஹித போகொல்லாகம பதிவு செய்துள்ள முறைப்பாட்டுக்கமைய இந்த விசாரணைகள் முன்னெடுக்கப் படவுள்ளன.



இதேவேளை, எவன்ட் கார்ட் நிறுவனத் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதி, எதிர்வரும் 15 ஆம் திகதி, விசாரணை ஒன்றுக்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் முன்னிலையாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அரசை சார்ந்திருந்தவர்களே இப்போது சூரியனை வாடகைக்கு எடுத்துள்ளனர்

## துரைராஜசிங்கம் குற்றச்சாட்டு



மட்டக்களப்பு, ஜூன் 14

முற்றுமுழுதாக அரசைச் சார்ந்திருந்தவர்களே இப்போது சூரியனை வாடகைக்கு எடுத்துக்கொண்டு மட்டக்களப்பில் தேர்தலில் களமிறங்கியுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட தலைமை வேட்பாளருமான கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

எதிர்வரும் நடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரப் பணிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், மட்டக்களப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் பிரசாரப் பணிகளை ஆரம்பித்துள்ளது. இதன்படி மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை மற்றும் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிசன் ஆகியவற்றுக்கு நேற்றுச் சனிக்கிழமை காலை விஜயம்செய்த வேட்பாளர் கி.துரைராஜசிங்கம், மதத் தலைவர்களிடம் ஆசிகளைப் பெற்றுக்கொண்டார்.

இதன்போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கவுள்ள செயற்பாடுகள் குறித்தும் மதத் தலைவர்களுடன் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் சிவம்பாக்கியாதன் உட்பட ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த கி.துரைராஜசிங்கம், எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

கொரோனா தொடர்பான பிரச்சினை இன்னும் முடிவுக்கு வரவில்லை. மாதிரி தேர்தல் ஒன்றை தேர்தல் ஆணையகம் நடத்தி அது தோல்வியில் முடிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் வேட்பாளர்களுக்கு இலக்கங்கள் வழங்கப்பட்டு அவர்கள் மும்முரமாக செயற்பட்டு வருகின்றனர். தேர்தலுக்கு மக்களைத் தயார்ப்படுத்துதல் என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

சரியானதொரு தெளிவு இல்லாத சூழ்நிலையில் தான் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. முற்றுமுழுதாக ஒரு புதிய அனுபவத்தை இலங்கையிலே வாக்காளர்களுடன் வேட்பாளர்களும் சந்திக்கவிருக்கின்றோம்.

இதேவேளை, மட்டக்களப்பிலே தற்போது இருக்கின்ற தேர்தல் களமானது முன்பிருந்த நிலைமைகளைவிட வித்தியாசமானதாகவே இருக்கின்றது.

மட்டக்களப்பிலே அரச சார்பிலே மொட்டு, படகு, சூரியன் (சின்னங்கள்) எனப் போட்டியிடுகின்றார்கள். சூரியன் என்பது எங்களுடையது. அது, தேர்தல் காலங்களில் வாடகைக்கு விடப்படுகின்றது. அவ்வாறுதான் இப்போதும் வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றது.

முற்றுமுழுதாக அரசை சார்ந்திருந்தவர்கள்தான் இப்போது சூரியனை வாடகைக்கு எடுத்துக்கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்திலே களத்தில் இறங்கியிருக்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர ஒட்டுமொத்தமாக இவர்கள் அனைவரும் அரசு சார்பானவர்களாகவே இருக்கின்றனர். அரசாங்கம் தொடர்ச்சியாக இந்த நாட்டை சிங்கள பௌத்த மயமாக்க நினைக்கின்றது.

ஆகவே தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றுதிரண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்களுக்கு உரித்தான நான்கு ஆசனங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது - என்றார்.

# கோவில் உடைத்து திருட்டில் ஈடுபட்ட சந்தேக நபர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 14

தென்மராட்சி, வரணி வடக்கில் அமைந்துள்ள கும்பிட்டான்புல பிள்ளையார் ஆலயத்தை கடந்த 09ஆம் திகதி உடைத்து திருடிய நபர் நேற்றுக் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் - சங்கானையை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு மந்துவில் குதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த நபரிடம் இருந்து திருட்டுப்போனதாகக் கூறப்படும் சங்கிலி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்று முன்தினம் மந்துவிலைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தில் கைதாகி பின்னர் அவர் சம்பவத்தில் தொடர்பற்றவர் என்பது உறுதி செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட நிலையிலேயே ஆலய சிசிரிவியில் அகப்பட்ட திருடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஆலயத்தில் சங்கிலி, 40,000 ரூபா பணம் மற்றும் ஐம்பொன்னாலான கலசம் உட்பட ஆறு இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருக்கள் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளில் இனி விசேட மருத்துவ அறை

## கல்வியமைச்சு திட்டம்

கொழும்பு, ஜூன் 13

பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், மருத்துவ சிகிச்சைகளை அளிக்கக்கூடிய வகையிலான அறையொன்றை தயார்படுத்திக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களுக்குக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகளில் மாணவர்கள் திடீர் சுகயீனமடையும் சந்தர்ப்பங்களில் அவர்களை வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்லும் வரை தங்க வைப்பதற்காக விசேட அறையொன்றைத் தயார்ப்படுத்துமாறு கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

கலவன் பாடசாலைகளில், மாணவர்களுக்குப் புறம்பாகவும், மாணவிகளுக்கு புறம்பாகவும் வெவ்வேறு அறைகளைத் தயார்ப்படுத்தி கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மருத்துவ அறையில் போதியளவு வெளிச்சம் மற்றும் காற்று செல்லக்கூடிய வகையில் அமைக்கப்படவேண்டும் என்பதுடன், கைகளைக் கழுவும் வசதிகளும் ஏற்படுத்தப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கட்டில், சுத்தமான குடிதண்ணீர், முதலுதவி வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், ஏனையோரிடமிருந்து இடைவெளியைப் பேணும் வகையிலான அறையாகவும் அது அமைக்கப்படவேண்டும் என கூறப்பட்டுள்ளது.

அந்த அறையுடன் இணைந்ததான மலசலகூட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும் எனக் கல்வி அமைச்சு அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

கொவிட் - 19 வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தும் திட்டம் தொடர்பில் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிவுறுத்தல்களில் இந்த விடயங்கள் தெளிவூட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 50 மாணவர்களுக்குக் குறைவான பாடசாலைகளில் ஒரு கட்டிலும், 50 முதல் 500 மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் 2 கட்டில்களும், 501ற்கு அதிக மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் குறைந்தது 3 கட்டில்களைக் கொண்டதாக இந்த மருத்துவ அறைகள் அமைக்கப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் அமைக்கப்படவுள்ள இந்த மருத்துவ அறையில் நோயாளர் ஒருவர் தங்கியிருந்து வெளியேறியுடன் சுத்திகரிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், நாளாந்தம் இரண்டு தடவைகள் இந்த அறையைச் சுத்தப்படுத்த வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

கிருமிகளை முழுமையாக இல்லாது செய்யும் வகையில் அவை சுத்திகரிக்கப்படவேண்டும் எனக் கல்வி அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

அடையாளம் காணப்படும் நோயாளர் ஒருவர் குறித்த அறையில் இருப்பாராயின், உரிய சுகாதார நடைமுறைகளின் கீழ் பொறுப்பாளரோ அல்லது சுகாதார அதிகாரிகளோ உள்ளே செல்வது கட்டாயமானது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.06.2020 இல் வெளியிடப்பெற்றது.